# அசிசிநகர் புனித பிரான்சிஸ்

**(1182 - 1226)**




**இயற்கை நேய VBS 2017**

## தொடர் கதை...

**தொகுப்பு : திரு. M. முடியப்பன்**

*திண்டிவனம்*

# முன்னுரை

இறைவார்த்தையில் தாகம் ஏற்படுத்தும் விடுமுறை விவிலியப் பள்ளியை தங்கள் பகுதியில் சிறப்பாக நடத்த முன்வந்துள்ள பொறுப்பாளர்களே, ஆசிரியப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே, ஆண்டுதோறும் VBS வகுப்புகள் நடத்தும்போது, ஒரு புனிதரின் வரலாற்றைக் கற்பித்து, அவரது வாழ்விலிருந்து பாடமாக ஏற்க வேண்டியவற்றை உள்வாங்கிக் கொள்ளவும், அப்புனிதரின் பரிந்துரையால் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் தமிழக விவிலியப் பணிக்குழு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் நல்ல வழக்கமாகும்.

நாம் வாழும் இப்பூமிப் பந்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை அகில உலகமும், திரு அவையும் உணர்ந்து கொள்ள திருத்தந்தை பிரான்சிஸ் “புகழ் அனைத்தும் உமக்கே” எனும் ஆவணத்தை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டை இரக்கத்தின் யூபிலி ஆண்டாகக் கொண்டாடியபோது, இயற்கையை பேணிப் பாதுகாப்பதை எட்டாம் இரக்கச் செயலாக திருத்தந்தை அறிவித்தார். இந்த அவரின் சிந்தனையால் தூண்டப்பட்டு தமிழக ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு **“இயற்கை நேய VBS – 2017”** என இவ்வாண்டின் விடுமுறை விவிலியக் கல்வியை சிறப்பிக்கின்றது. எனவே இந்த ஆண்டு இயற்கை நேயர் அசிசிநகர் புனித பிரான்சிஸ் பற்றி 9 நாள்கள் கற்பிக்கும் விதத்தில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான முன்முயற்சிகளை எடுத்துவரும் தமிழக விவிலியப் பணிக்குழுவின் செயலர் **அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்** அவர்களுக்கும் இந்நூலைத் தயாரித்தளிக்கும் **பேராசிரியர் M. முடியப்பன்** அவர்களுக்கும் நன்றியும், பாராட்டுகளும். இதை அச்சேற்றி கணணியாக்கம் செய்த **திருமதி. ஸ்டெல்லா** அவர்களுக்கும், வெளியிடும் முப்பணி மைய இயக்குநர் **அருள்பணி. ம. பிலோமின் தாஸ்** அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

ஆசிரியப் பெருமக்கள், இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளபடி 9 நாள்களில் இப்புனிதரை மாணவர்களின் உள்ளத்தில் நன்கு பதிய வைப்பார்களாக! தங்கள் வாழ்வுக்கும் இப்புனிதரின் பரிந்துரையில் இறை இரக்க ஆசிகளைப் பெற்று இயற்கை நேயர்களாக வாழ முனைவார்களாக!

*இறைவார்த்தைப்பணியில் என்றும் அன்புடன்*

திண்டிவனம்
04.02.2017

**மேதகு ஆயர். செ. சூசை மாணிக்கம்**
சிவகங்கை ஆயர்
தலைவர், தமிழக விவிலியப் பணிக்குழு




## முதல் நாள்

அன்பார்ந்த தம்பி தங்கைகளே! வி.பி. எஸ். என்றாலே நமக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சிதான். அதில் ஆட்டம் - பாட்டு - விளையாட்டு எல்லாம் உண்டு. ஆங்கே தனித்தனியாக சில சாதனைகளைச் சாதிக்கிறோம், குழுக்களில் சேர்ந்து நமது திறமைகளையும் காண்பிக்கிறோம். வி.பி. எஸ் நிகழ்வுகளில் மெருகூட்ட வருவது ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு புனிதருடைய வாழ்க்கை வரலாற்றை நாம் வாசிப்பதுதானே! ஆமாம்; இவ்வாண்டில் நாம் வாசிக்க விருப்பது - அசிசி நகர் புனித பிரான்சிசுடைய வாழ்க்கை வரலாறு.

இந்த புனிதருடைய வாழ்க்கை வரலாற்றினை தேர்ந்தெடுத்ததற்கு தகுந்த சில காரணங்களுண்டு. அதற்கான காரணங்களை நாம் இந்த பத்து நாள்களும் சிறிது சிறிதாக, இப்புனிதருடைய வாழ்க்கை வரலாற்றிற்கிடையே படித்துத் தெரிந்து கொள்ளப் போகிறோம். ஒவ்வொரு நாளும் கவனித்துக் கேளுங்கள். ஒவ்வொருநாளும் இப்புனிதருடைய வாழ்க்கை வரலாற்றின் சிறப்பு அம்சத்தை ஒரு நோட்டு புத்தகத்தில் குறித்துக்கொண்டு வந்தால் நல்லது. எப்படியும் பத்தாம் நாளில் நீங்கள் இந்தப் புனிதருடைய சிறப்புத் தன்மைகளை எடுத்து எனக்குச் சொல்லுவீர்கள். இந்த வருடம் இந்தப் புனிதருடைய வாழ்க்கை வரலாறு எப்படி மிகப் பொருத்தமாக உள்ளது எனவும் எடுத்துச் சொல்லப் போகிறீர்கள்!

**தம்பி தங்கைகளே!**

அகில உலக மக்களால் அதிகமாக விரும்பப்பட்டு மிகவும் மதிக்கக்கூடிய தற்கால உலகத் தலைவர் யார் தெரியுமா? சரிதான்! நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது. ஆம், நம் திருத்தந்தை பிரான்சிஸ் என்பது சரி தான். அவருடைய இயற்பெயர் என்ன? அதாவது, அவருடைய பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் யாது?

ஹோர்கே மாரியோ பெரிகோலியோ அவர் இயற்பெயர். இது தென் அமெரிக்க இலத்தீன் மொழியாகும். இவருடைய பெற்றோர் மரியன்னைமீது பக்திகொண்டவர் என்பது தெரிகிறது. எனவேதான் மாரியோ என்றுள்ளது. இவர் 2013-ல் 266-ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அசிசிநகரின் புனித பிரான்சிசுடைய பெயரை தனது சிறப்புப் பெயராக எடுத்துக் கொண்டார். இப்படி, திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், ஒரு புதிய பெயரை எடுத்துக் கொள்வது வழக்கம். இதற்கு முன்பு இருந்த திருத்தந்தையர் யாரும் இந்தப் பெயரை எடுத்துக் கொண்டது இல்லை. கர்தினால் ஹோர்கே மாரியோ பெரிகோலியோ அவர்கள்தான் இந்தப் புனிதருடையப் பெயரை எடுத்துள்ள முதல் திருத்தந்தை. அதற்கான காரணங்களையும், தம்பி தங்கைகளே, நீங்கள் எனக்கு எடுத்துச் சொல்லப் போகிறீர்கள், அடுத்த பத்தாம் நாளில்!

நமது பாசமிகு திருத்தந்தை பிரான்சிஸ், இயேசு சபையில் சேர்ந்து குருவாக திருநிலைப்பெற்று, ஆயராகவும் கர்தினாலாகவும் உயர்வு பெற்று திருத்தந்தையாகவும் கடவுளே உயர்த்தியுள்ளார்.

நமது கத்தோலிக்கத் திருஅவையில் பிரான்சிஸ் என்ற பெயருடைய வேறு புனிதர்களும் உண்டு. அவர்களைவிட காலத்தால் முந்தியவர் - அசிசி பிரான்சிஸ். அவர்களுக்கு முன்பு முதலில் புனிதர்பட்டம் பெற்று புகழ் பெற்றவர், இவ்வாண்டு நாம் படிக்கும் புனிதர் - அசிசி நகர் பிரான்சிஸ்.

அசிசி நகர் புனித பிரான்சிசுடைய முன்மாதிரியைப் பின்பற்றியே பிற்காலத்தில் புனிதராகி புகழ்பெற்றவர் புனித பிரான்சிஸ் சவேரியார். இவர் காலம் கி.பி. 1506 - 1552 ஆகும். இவர் இயேசு சபை குருவானவர். மற்றும், அசிசி நகர் பிரான்சிஸ் பெயரைத் தாங்கி பிற்காலத்தில் புனிதரானவர் பிரான்சிஸ் சலேசியார். இவரது காலம் 1567 - 1622 ஆகும். இவர் சலேசிய சபை நிறுவப்பட தூண்டுதலாயிருந்தவர். இந்த ஆண்டு நாம் படிக்கப் போவது அசிசி நகர்ப் புனித பிரான்சிஸ் பற்றிதான். இந்த அசிசி நகர்ப் புனித பிரான்சிஸ் பெயரைத்தான் நமது தற்போதைய உலகப் புகழ் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துக் கொண்டுள்ளார்.

அசிசி நகர் புனித பிரான்சிஸ் புனிதர்களாலும் போற்றப் பெறுபவர்; சமுதாய சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தவர். திருஅவையில் சில நல் மாற்றங்களைக் கொண்டு வந்தவர். துறவற ஆன்மீகத்திலும் புதினம் புகுத்தியவர். இக்கருத்துகளை புரிந்துகொள்ள நமது திருஅவையின் அமைப்பு முறையைப் பற்றி சிறிது விளக்கம் பெறுவது நல்லது.

### திரு அவை

நமது கத்தோலிக்கத் திரு அவையில் மூன்று அமைப்பினர் உள்ளோம். அவை (1) திரு ஆட்சியாளர், (2) துறவு நிலையினர், (3) பொது நிலையினர் என்பவை.

### 1. திரு ஆட்சியாளர்

இந்த அமைப்பில் உள்ளவர்கள் அருள்பொழிவு (அபிஷேகம்) பெற்றவர்கள். அவர்கள் யாவர்? அவர்களின் பணிகள் யாவை? முக்கிய பணிகளை இவண் காண்போம்.

#### i. திருத்தொண்டர்

ஆயர் கைநீட்டி வைத்து செபம் - அருள்பொழிவு செய்து திரு அவையின் பணிக்காக நியமிக்கப்படுபவர். ஆயருடனும், அவரது குருக்களுடனும் ஒன்றித்து பொதுநிலையினருக்கு சேவை செய்பவர்கள் திருத்தொண்டர்கள். அருளடையாளங்களை நிறைவேற்ற அனுமதியில்லை.

#### ii. குருக்கள்

திருத்தொண்டர் நிலையிலிருந்து ஆயரால் அருள்பொழிவு பெற்றவர்கள். திருப்பலி மற்றும் அருளடையாளங்களை நிறைவேற்றுபவர்கள்.

#### iii. ஆயர்

குருக்களாயிருப்பவர்களில் சிலரை ஆயர் ஒருவர் அருள்பொழிவு செய்வதால் ஆயர் நிலைக்கு உயர்த்தப் பெறுகிறார். ஓர் ஆயரின் சிறப்புப் பணிகளாவன:

- ♥ கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்பூசுதல் தரும் அதிகாரம் ஆயருக்கு உரியது.
- ♥ திருத்தொண்டர் பட்டம் தரும் அதிகாரம் ஆயருக்குண்டு.
- ♥ திருத்தொண்டராயிருப்பவருக்கு குரு பட்டம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் ஆயர்.
- ♥ ஆயர்களில் சிலர் கர்தினால் என்ற உயர்நிலைக்கு திருத்தந்தையால் நியமிக்கப்படுவர்.
- ♥ கர்தினால்களிலிருந்து திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவார்.
- ♥ திருத்தந்தையே புனிதர்பட்டம் வழங்கும் சிறப்பு அதிகாரம் பெற்றுள்ளவர்.
- ♥ திரு ஆட்சியாளர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் மணத்துறவு நிலையை ஏற்று பணி செய்பவர்கள்.

### 2. துறவு நிலையினர்

நற்செய்தி அறிவுரைகளைப் பின்பற்றி செபவாழ்வு, தன்னல மறுப்பு வாழ்வு, மணத்துறவு வாழ்வு மேற்கொண்டு, திருப்பணியாளர்களுக்கு உதவிடவும், பொதுநிலையினருக்கு வழிகாட்டுமாறும் அர்ப்பணவாழ்வு மேற்கொள்பவர்கள். பெண் துறவிகள் - அருள்சகோதரிகள் என்றும், ஆண் துறவிகள் அருள்சகோதரர்கள் என்றும் அழைக்கப்படுவர். இத்தகைய ஆண் - பெண் துறவிகள் அருள்பொழிவு பெற்றவரல்லர். ஆண் துறவியரில் அருள்பொழிவு பெற்ற துறவி குருக்களும் உண்டு.

அசிசிநகர் புனித பிரான்சிஸ் ஒரு துறவியாக மட்டும் இருந்து, புனிதர் பட்டம் பெற்றவர். தாம் உருவாக்கிய சபையில் ஆண் துறவியரும், பெண் துறவியரும், அருள்பொழிவு பெற்ற துறவு நிலை குருக்களும் மற்றும் திருமணமான பொதுநிலையினரும் இருந்து புனிதம் அடையுமாறு புரட்சி செய்தவர்; புதினம் படைத்தவர். இவற்றை மேலும் இனி வரும் நாள்களில் பார்ப்போம்.

### 3. பொதுநிலையினர்

பொதுநிலையினர் என்பது, அருள்பொழிவு பெற்று திருப்பணி செய்யும் திரு ஆட்சியாளரையும், திரு அவையின் இசைவு பெற்று துறவு நிலை மேற்கொண்டு பணி செய்வோரையும் தவிர்த்து, உள்ள திருமுழுக்கு பெற்ற நம்பிக்கையாளர் அமைப்பே பொது நிலையினர் அமைப்பு ஆகும். (தி. எண் 31).

தம்பி தங்கைககளே! இப்போது நீங்கள் - பொதுநிலையினர் அமைப்பில் உள்ளீர்கள். பிற்காலத்தில் நீங்கள் திருத்தொண்டராகவோ, குருவானவராகவோ வர வாய்ப்பு உள்ளது. அல்லது துறவு நிலையையும் தேர்ந்து கொள்ளலாம், அருள்சகோதரியாகலாம்.

அசிசி நகர் புனித பிரான்சிஸ் சபையில் இரு பாலாரும் சேர வாய்ப்பு உண்டு. திரு ஆட்சி அமைப்பினராகவும் ஆகலாம், துறவு நிலையினராகவும் நீங்கள் மாறலாம், அதே சபையைச் சார்ந்த பொதுநிலையினராகவும் மாறலாம். விளக்கம் பின்வரும் நாள்களில் காண்பீர்கள். தவறாமல் தினம் வந்து கேளுங்கள்.

### இல்லறம் – துறவறம் – அருள்பொழிவு நிலைத் துறவறம்

தம்பி தங்கையரே! உங்கள் மனதில், இல்லறம் சிறந்ததா அதாவது பொதுநிலையினர் நிலை சிறந்ததா? அல்லது துறவறம் சிறந்ததா? என்ற கேள்வி எழலாம். இது பொதுவாக எல்லா மக்களிடமும் எழுகிற கேள்வி! இது இவ்விரு வாழ்க்கை நிலை பற்றிய தெளிவு பெறாததால் வரும் சந்தேகம். இதற்கு அசிசி நகர் புனித பிரான்சிஸ் நல்ல தெளிவைக் கொடுப்பதை பின்வரும் நாள்களில் நாம் காணலாம். கவனமுடன் படியுங்கள்; ஆசிரியர் விளக்கும்போது கவனமாகக் கேளுங்கள்.

அதுமட்டுமல்ல, ஒருவர் மீட்படைய துறவறமே சிறந்தது என்றும், மோட்சம் போக துறவறம் எளிய வழி என்றும் பலர் எண்ணுகின்றனர்; அவ்வாறே பேசுகின்றனர். இது பற்றிய சரியான கருத்து யாது? அசிசி நகர் பிரான்சிஸ் கூறுவது யாது? இவற்றை அறிய முற்படுவோம்!

அத்துடன் துறவுநிலை குருக்கள் பற்றிய தெளிவும் பலருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

பொதுவாக, திருஆட்சி அமைப்பில் வரும் குருக்கள் தரும் வாக்குறுதிகள்:

(i) மணத்துறவு (ii) கீழ்ப்படிதல். இவர்களை மேற்றிராசன குருக்கள் எனலாம்.

துறவு நிலை மேற்கொண்டு அருள்பொழிவு பெற்றுவரும் குருக்கள் தரும் வாக்குறுதிகள்; (i) மணத்துறவு (ii) கீழ்ப்படிதல் (iii) ஏழ்மை.

பொதுநிலையினரும் சில வாக்குறுதிகளைத் தரவும் புனிதம் பெறவும் வழி செய்துள்ளார் அசிசி பிரான்சிஸ், அதன் விபரம் சிறப்புகளை இனிவரும் நாள்களில் காண்போம். நாளை முதல் இவைகளைப் படிப்போம்.

மாணவ மாணவிகளே! அசிசி நகர் புனித பிரான்சிஸ், ஒரு துறவி. தன்னை சகோதரர் பிரான்சிஸ் என பிறர் அழைப்பதை விரும்பினார். அவரைப் பின்பற்றி அவரைப்போலவே வாழ அவருடன் வந்தவர்களையும் சகோதரர்கள் என அழைக்கப்பட விரும்பினார். இந்த சபையில் சேர்ந்த குருக்களும் சகோதரர்கள் என அழைக்கப்பட்டனர். இது திரு அவையில் குடியாட்சி என்றும் மக்களாட்சி முறை என்றும் அழைக்கப்பட்டது. இப்படியாக பிரான்சிஸ்கன் சபையில் சில வாழ்க்கை முறைப் பிரிவுகள் ஏற்பட்டன. அவை யாவை? எத்தனை வகைகள்? அவற்றின் சிறப்பு யாது? சிந்திக்க வேண்டியவையாயுள்ளன.

இன்னும் மேலாக, நமது திருத்தந்தை “பிரான்சிஸ்” என்ற சிறப்புப் பெயரை எடுத்துக் கொண்டதற்கான குறிக்கோள் - காரணங்கள் இருக்கலாம். பிரான்சிஸ் அசிசி புனிதருடைய வாழ்க்கைக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது எனலாம் அல்லவா? இவை பற்றி வரும் நாள்களில் அறிந்து கொள்ள உங்களுக்கு ஆவலா? ஆம். சரி, நாளை முதல் தவறாமல் வாருங்கள்! இவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்வோம். தவறாமல், வரும் பத்து நாள்களும் வாருங்கள்! நாளை சந்திப்போம்!

## இரண்டாம் நாள்

### அசிசிநகர் புனித பிரான்சிஸ் பிறப்பும் இளமையும்

இத்தாலி நாட்டில் கி.பி. 1182-ஆம் ஆண்டில் அசிசி என்ற ஊரில் பிரான்சிஸ் பிறந்தார். இத்தாலி எனும் நாடு ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஓர் அழகிய நாடு. மலைகளாலும் அழகிய பள்ளத்தாக்குகளாலும் இயற்கை வளம் பெற்றுள்ள நாடு. மத்தியத் தரைக்கடலால் சூழப்பட்டுள்ளதால் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கிய நாடு. பிரான்சு, ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி முதலிய தென் ஐரோப்பிய நாடுகளுடனும், ஜெர்மனி முதலிய வட ஐரோப்பிய நாடுகளுடனும் தொடர்புடையது. இத்தாலியின் தலைநகரமாக விளங்குவது உரோமை நகரம். உரோமை நகர் நமது உலக கத்தோலிக்கத் திரு அவையின் தலைநகரமாகவும் விளங்கி வருகிறது. அசிசி நகருக்கருகில் உள்ள

பெருஜியா என்ற ஊரும் ஸ்பொலேட்டோ என்ற நகரும் இன்றும் மனதை ஈர்ப்பவையாயுள்ளன. இத்தாலி நாட்டிற்கும் நமது இந்திய நாட்டிற்குமிடையே கடல்வழி வாணிபம் சிறந்தோங்கி வந்துள்ளது. இத்தாலி நாட்டு நாணயங்கள் தென்னிந்தியாவின் சிறிய துறைமுக நகரான புதுச்சேரியில் - வீராம்பட்டினக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது இதற்கு ஆதாரமாகும். மேலும் 16-ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டிலிருந்து கத்தோலிக்க சமயக் குருக்கள் இந்தியாவுக்கு வந்து நற்செய்தி அறிவிப்புப் பணிகள் செய்துள்ளனர் என்பதை நாம் அறிகிறோம். இத்தாலி நாட்டில் குறிப்பாக அசிசி நகரில் உருவான அசிசி நகர் பிரான்சிஸ் உருவாக்கிய பிரான்சிஸ்கன் சபை சகோதரர்களும், பிரான்சிஸ் பெயரால் உருவான கப்பூச்சின் சபை குருக்களும் இந்தியாவில் வந்து நற்செய்திப் பணி ஆற்றியுள்ளனர். தமிழகத்தில் இன்றும் அச்சபையோரைக் காண்கிறோம்.

அசிசி பட்டினம் எழுநூறு - எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தது போன்றே, இன்றும் இயற்கை அழகு மாறாமலேயே உள்ளது. அவ்வூரில் அழகு செய்யும் சுபாசியோ என்ற மலையும், அதன் அடிவாரத்தில் காணப்படும் அமைதியான ஊர்களும் இடையிடையே காணப்படும் பசுமையான பள்ளத்தாக்குகளும் இன்றும் காண்போர் மனதை கவர்கின்றன.

### பெற்றோர்

அசிசி நகர் பிரான்சிசின் தந்தை பீட்டர் பெர்னார்டோன், இத்தாலி நாட்டில் செல்வமிக்க துணி வியாபாரியாக விளங்கினார். அதிகமதிகமாக பணம் பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, பக்கத்து நாடுகளான பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய நாடுகளுக்குச் சென்று துணி வியாபாரம் செய்து தொழிலில் பேரும் புகழும் பெற்றார். இவ்வாறு உயர்ரக பட்டு - பீதாம்பர உடைகளை வாங்குவதிலும், விலைபேசி விற்பதிலும் பலநாள்கள் கடந்து விடும். சில சந்தர்ப்பங்களில் சொந்தவீடு வந்துசேர தடைகள் ஏற்படுவதுண்டு.

பிரான்சிசினுடைய தாயார் பீக்கா அம்மையார். இவர் ஓர் உயர்குடிப் பெண்மணி. இறை பக்தியுள்ளவர். பீக்கா அம்மையார் தன் முதல் மகன் பிரான்சிசைப் பெற்றெடுத்தபோது, கணவர் பீட்டர் பெர்னார்டோன் வியாபார நிமித்தம் வெளியூரிலிருந்து இன்னும் திரும்பவில்லை. அவர் வீடுவர எத்தனை நாளாகும் எனக் கணிக்க முடியவில்லை. தனது பிள்ளை சீக்கிரம் கடவுள் பிள்ளையாக மாறவேண்டும் என ஆசித்தார். எனவே தனது ஊர் அருகிலிருந்த ரூபினோ தேவாலயத்தில் திருமுழுக்காட்டி அருளப்பன் (ஜான்) என்று பெயர் சூட்டினார். என்னே பீக்கா அம்மையாரின் பக்தி!

நம் ஊர்களில் சிலர் குழந்தை பிறந்து பல நாள்களான பின்பும் தன் குழந்தைக்கு திருமுழுக்காட்ட காலதாமதம் செய்வதைப் பார்க்கிறோம். குழந்தை பிறந்த மறுநாளேகூட குழந்தைக்குத் திருமுழுக்களிப்பது மிகமிக நல்லது.

## பெயர்மாற்றம்

பீட்டர் பெர்னார்டோன் சில நாள்களுக்குப்பின் வியாபார வேலைக்கிடையில் வீடுவந்தபோது தன் அழகிய மகனைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தார். பிரான்சு நாட்டின்மேல் இவருக்கு அதிக பற்று இருந்தது. பிரான்சு நாட்டில் இவருக்கு அதிக இலாபமும் கிடைத்தது. இவருக்கு இத்தாலிய மொழியுடன் பிரஞ்சு மொழியும் தெரியும். பிரஞ்சு மொழி மோகம் அதிகம் இவருக்கிருந்தது.

எனவே தன் மகனை பிரான்செஸ்கோ என்று செல்லமாக பிரஞ்சு மொழியில் அழைக்கலானார். “பிரான்சியச் சிறுவன்” என்ற அர்த்தத்துடன் புதுப்பெயரால் கொஞ்சலானார். அதுவே பிற்காலத்திலும் நிலைக்க வாயிற்று. ஜான்-டோன்-தொன்- என்ற ஆங்கில இத்தாலிய மொழிச் சொல் அருளப்பர் என்ற பொருளுடையது.

பீக்கா அம்மையார் இல்லப் பொறுப்புகளையும், இல்லத்தோடு இணைந்திருந்த துணிவியாபாரத்தையும் கவனித்து வந்தார். எனினும் தன் மகன் கிறிஸ்தவ ஞானத்தில் வளர கண்ணும் கருத்துமாயிருந்தார்.

## பள்ளிப்படிப்பு

பிரான்சிசின் இல்லத்திற்கருகில் புனித ஜார்ஜ் தேவாலயமும் அதனை அடுத்து ஒரு கல்விக்கூடமும் இருந்தன. அந்தக் கல்விக்கூடத்தை நடத்தி வந்த துறவிகளிடமிருந்து பிரான்சிஸ் ஆரம்பக் கல்வி கற்றார்; அத்துடன் தெய்வீக மொழியாகிய இலத்தீன் மொழியை எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். தன் மகன் பெரிய பட்டதாரி ஆகவேண்டும் என பீக்கா அம்மையார் ஆசைப்படவில்லை.

உலகக் கல்வியைவிட ஞானக்கல்வியாட்டுவதில் தாய் அதிக அக்கறை காட்டினார். இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவானைப் போலவே தன் மகனும் இயேசுவுக்கு சான்று பகர வேண்டும் என பீக்கா அம்மை விரும்பினார். அது நிறைவேறியதோ!! பார்ப்போம்.

நமது ஊர்களில் சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை கோவிலுக்கு அனுப்புவதில்லை; மறைக்கல்வி வகுப்பிற்கு அனுப்புவதற்கு பதிலாக டியூஷன் வகுப்புகளுக்கு அனுப்பவதில் அக்கறைகாட்டுவதைப் பார்க்கிறோம். இது சரியில்லை.

தன்னைப் போல பெரிய துணி வியாபாரி ஆவதை விரும்பினார் பெர்னார்டோன். எனவே மகனை துணி வியாபாரத்தில் ஈடுபடுத்தலானார். சமயா சமயம் துணி வியாபாரம் செய்வதில் தரகு பேசி - வியாபாரத்தில் வெற்றி பெறும் யுத்திகளையும் பிரான்சிஸ் சிறிது கற்றுக் கொள்ள முடிந்தது. எடுத்த காரியத்தை வெற்றியாக முடிக்கும் திறமை அவரிடம் காணப்பட்டதை தந்தை பாராட்டினார்.

## இளமை துடிப்பு

இளமையில் பிரான்சிசும் செல்வச் செறுக்குடன் வாழத் தலைப்பட்டார். பணக்காரப் பிள்ளைகளுடன் சேர்ந்து ஆடம்பர விருந்துண்டு, குடித்து களியாட்டங்களில் ஈடுபடலானார். அந்தக்கால இளைஞர்கள் சிறந்த வீர தீரக் கவிதைகளையும் வீர காவியங்களையும் கற்பதில் ஆர்வம் காட்டினர். பல்வேறு இடங்களுக்கு குதிகரைகள்மீது சென்று வீரதீரச் செயல்கள் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருந்தனர். பிரான்சிசும் பல இடங்களுக்கு குதிரைமீது ஏறி சென்று வருவதிலும் உயரிய பட்டாடைகள் உடுத்துவதிலும் பெருமை கொண்டிருந்தார். தானும் ஏதாவது தீரச் செயல் செய்து காட்டி பெருமை அடைய வேண்டும் என எண்ணினார். தந்தை பீட்டர் பெர்னார்டோனுக்கு மகன் பிரான்சிஸ் பெரிய தீரச் செயல் செய்வதுடன் பெரிய பணக்காரனாக வேண்டும் என்பதே பேரவா. தாய் பீக்கா அம்மையார் தன் மகன் ஒரு புனிதனாக வாழ வேண்டும் என்றே ஆசித்தார்.

பிரான்சிசின் இளமைத்துடிப்பு வீரசாகசம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் ஈடுபட ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

## உள்நாட்டுப்போர்வழி உருவாக்கம்

பிரான்சிசுக்கு 20 வயதில் தீரச் செயல் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்ட சமயத்தில் ஓர் உள் நாட்டுப்போர் ஏற்பட்டது. அசிசி நகருக்கும் பக்கத்து ஊரான பெருஜியா என்ற ஊருக்குமிடையே வியாபார நிமித்தம் மக்களிடையே போர் மூண்டது. கி.பி. 1202-ல் ஏற்பட்ட இந்தப் போர் பெருஜியாப் போர் எனப்படுகிறது. இந்தப்போரில் போர்க்கோலம் பூண்டு பெருஜியா நகரை எதிர்த்து தன் சொந்த ஊராகிய அசிசி நகரத்துக்கு வெற்றி தேடித்தர பிரான்சிஸ் புறப்பட்டார். வீராவேசத்தோடு போரிட்டார். எதிரியாக நின்றவரை வெட்டி வீழ்த்தினார். சிலர் இறந்தனர். அது கண்டு அவரது மனம் இளகியது. நம் நாட்டு அசோக மன்னன் போரில் மாண்டவர்களைக் கண்டு மனம்மாறியதுபோல, பிரான்சிசு மனமும் இளகி, மனம் சிறிது சிறிதாக புனித வழிக்கு மாற ஆரம்பிக்க பிரான்சிசும் தோல்வியைச் சந்திக்கலானார். அசிசி நகரமும் தோற்றது.

பெருஜியா சிறையில் பிரான்சிஸ் அடைக்கப்பட்டார். பெருஜியா மக்களும் வீரர்களும் சிறைக் கைதிகளைப் பெரிதும் துன்புறுத்தினர். பிரான்சிசுக்கு சிறைவாழ்வு கடினமாயிருந்தது. போரின் ஈட்டி, கத்தி, வாள்களாலான போர்க் காயங்கள் பிரான்சிசுக்கு வேதனையைத் தரலாயின. போர்க்குறிக்காயமே புகழின் காயம் என சிறிது அமைதி கொள்ள முயன்றார். தனது துன்பங்களுக்கிடையே இறைவனை சிந்தித்து தியானிக்க முற்பட்டார். தன் தாய் பீக்கா கற்பித்த சிறு சிறு மன வல்லிய செபங்களை முணுமுணுக்கத் தொடங்கினார். தன்னுடன் சிறையில் வதியும் சிறைக் கைதிகளின் வலி நோக்காடுகளையும் கவனிக்க

நேர்ந்தது. அப்போது தான், பிறருடைய துன்பங்களையும் நாம் சமயா சமயம் நினைக்க வேண்டும் என்ற ஒரு புதிய பாடமும் அவர் கற்றார். அதே வேளையில் அன்னை கற்பித்த செபங்களை முணுமுணுத்தபோது ஆண்டவர் இயேசுவினுடைய பாடுகளின் காயங்களைப் பற்றியும் யோசிக்கத் தொடங்கினார்.

இவருடைய செபத்தின் பயனாகவோ, அன்னை பீக்காவின் செபத்தினாலோ, பிரான்சிசுக்கும், உடன் கைதிகளுக்கும் விடுதலை கிடைத்தது.

## இயற்கை எழிலில் இறைவனைக் காணல்

விடுதலைப் பெற்று வீடு வந்த பிரான்சிசு, பல்கலை கழகத்தில் படித்து பெரிய பட்டதாரியாக வேண்டும் என அவருடைய தந்தை விரும்பினார். பிரான்சிசுக்கு படிப்பில் நாட்டமில்லை.

இந்தத் தோல்வி ஏன்? இந்த ஈட்டி - கத்தி - வெட்டுக் காயங்கள் ஏன்? பிரான்சிசுக்கு புரியாத புதிராயிருந்தது.

படிக்காவிட்டாலும் மகன் பணக்காரனாகலாம் என தந்தை எண்ணினார்.

பெருஜியா போரினால் பாதிக்கப்பட்டிருந்த பிரான்சிஸ் உடல் நலமும் மனநலமும் பெற, அருகிலிருந்த இயற்கை அழகு நிறைந்த மலைப் பிரதேசத்தில் சில நாள் தங்கி இளைப்பாற விரும்பினார். அவர் சென்று இளைப்பாறிய இடம் அழகு நிறை சோலைவனம். பச்சைக் கம்பளம் போட்டு விரித்துள்ளது போன்ற அழகிய புல்வெளி. ஆங்காங்கே அழகிய வண்ண வண்ண மலர்கள் மணம் வீசின. பறவைகளின் இன்னிசை, வண்டுகளின் ரிங்கார ஒலி மனதிற்கு இதமாய் இருந்தன. ஓடையில் நீந்திய மீன்களின் அசைவிலும் அமைதி காண முடிந்தது.

இயற்கைப் பொருள்கள் யாவும் மனிதரின் வாழ்க்கைக்கு அவசியமாக உள்ள நிலையை உணர்ந்தார். இயற்கை இல்லாமல் மனித வாழ்வு இல்லை. மனிதனின் உதவியின்றி இயற்கை நிலைக்க முடியும் என்ற பெரிய உண்மையை உணர்ந்தார். இயற்கையில் அதன் எழிலில் பிரான்சிஸ் இறைவனைக் கண்டார். மான்கள் ஏன் பயப்படுகின்றனவே!

ஆதாம் ஏவாள் கடவுள் கட்டளையை மீறி பாவம் செய்யுமுன், சிங்கம், புலி, ஓநாய் முதலிய கொடிய மிருகங்களும் மனிதனுடன் இணக்கமாகவே வாழ்ந்தன என தன் தாய் கூறியதை நினைவு கூர்ந்தார்.

## இயற்கையின் இரகசியம்!

இந்த உணர்வுகளே, பிற்காலத்தில், இயற்கையைப் புகழ்ந்து, இறைவனைப் போற்றி "ஆதவனின் கீதம்" என்ற பாடலைப் புனைந்து இசை அமைத்துப் பாடியுள்ளார். இயற்கை யாவும் தன் சகோதர சகோதரி என்ற உணர்வுக்கு வந்தார் - பிரான்சிஸ்.

## ஆதவனின் கீதம்

ஆதவன் என்றால் சூரியன். ஆதவனின் கீதத்தில் சூரியனைப் பற்றி மட்டுமல்ல, சந்திரன், விண்மீன்கள், பூமித்தாய், மழை, நெருப்பு, மரம் செடிகள் மலர்கள் - என்ற அனைத்து இயற்கையையும் பாடி, இறைவனைப் புகழ்ந்துள்ளார்.

இதோ ஓரிரு அடிகள்!

1. முதலில் படைத்தீர் கதிரவனை
   நாளும் ஒளியை அழகுடன் நல்கி
   சொலிக்கும் கதிர் மண்டல முகத்தின்
   சாயலும் குறியும் ஆண்டவரே
2. துதிக்குரிய இறைவனே!
   சகோதரி திங்களைப் படைத்தவரே!
   துணையாம் எழில் மிகு விண்மீன்கள்
   தூய ஒளியுடன் மிளிர்கின்றன
3. தாயாம் பூமியை படைத்தோரே
   தேவையாம் உணவைத் தந்து
   தாங்கி ஆதரித்து பொறுமையுடன்
   காக்கும் இறைவா உமக்கே துதி

## திருத்தந்தை பிரான்சிசும் - இயற்கையும்

இயற்கையை இரசித்து, இயற்கையில் லயித்து, இயற்கையில் இறைவனைப் புகழ்ந்து பாடலும் இயற்றிய அசிசி நகர் புனித பிரான்சிசுடைய அந்த புனித மனநிலை இன்று நமக்கு மிகவும் தேவைப்படுகிறது என இன்றைய நமது திருத்தந்தை பிரான்சிஸ், "புகழ் அனைத்தும் உமதே"! என்ற ஒரு கோட்பாட்டு நூலை நமக்கு அளித்துள்ளார். இயற்கையின் அதிசயங்களையும், மனிதனுக்காக இறைவன் படைத்தளித்துள்ள இயற்கையின் நுணுக்கங்களையும் நாம் அறிந்து உணர்ந்து இறைவனைப் புகழ அழைப்பதே "புகழ் அனைத்தும் உமதே" எனும் சுற்றுமடல்.

## மேலும் திருத்தந்தை அதில் கூறுவது:

"இயேசு இயற்கை ஆர்வலர். மனிதனோ, உலகமயமாக்கல், நவீன தொழில் நுட்பம், வணிகம் மற்றும் உற்பத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் செயல் திட்டங்கள் அனைத்தினாலும் ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான தாவர மற்றும் விலங்கின உயிரினங்கள் மறையக் காரணமாக இருக்கின்றன. கி.பி. 2050-க்குள் நமது சுயநலச் செயலால் ஆயிரக்கணக்கான தாவர மற்றும் விலங்கின உயிரினங்கள் முழுவதும் மறைந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது" (புகழ் 32:42).

இவ்வாறு நாம் இயற்கையின் முக்கியத்துவத்தை உணர வைக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### நான் – நீ – நாம்?

தண்ணீர் மாசுபடுகிறது; காற்று மாசுபடுகிறது; சுற்றுப்புறச் சூழல் மாசடைகிறது - இன்றைய உலக நிலைமை இது. இயற்கையை உதாசினப்படுத்துகிறோம்; எச்சரிக்கிறார் நம் திருத்தந்தை.

சில பிள்ளைகள் பராமரிக்கப்பட்டுவரும் அழகிய புல்தரைமீது நடந்து அழகைக் கெடுக்கிறார்கள். சிலர் பூக்களை வீணே பரித்து கசக்கி எரிகிறார்கள். சிலர் தவளையை, ஓணானை, தும்பிகளை பலவழிகளில் துன்புறுத்துகிறார்கள். இவை பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

இயற்கையே இறைவன். இயற்கையைப் பராமரிப்போம் - இன்பமாய் வாழ்வோம்.

### இயற்கை மருந்து

இயற்கை எனும் மருந்தினால் போர்க்காயம், மனக் காயத்திலிருந்து சுகம் பெற்ற அசிசி நகர் புனித பிரான்சிசு அடுத்து என்ன செய்தார்? நாளை பார்ப்போம்! வாருங்கள்!

## மூன்றாம் நாள்

### கிறிஸ்துவின் போர் வீரனாக மனமாற்றம்

பிரான்சிஸ் முதல் போரின் புண்கள் ஆறிட, இயற்கையைக் கண்டு களித்து ஓய்வெடுத்தபின் முழுமையாக உடல் நலம் பெற்றார். துணி வியாபாரத்தில் வந்த செல்வங்களைக் கொண்டு வெகு ஆடம்பரமாக வாழத் தலைப்பட்டார். தந்தை பீட்டர் பெர்னார்டோனுக்கு அது பெருமையாகவே இருந்தது. அன்னை பீக்கா அவர்களுக்கு மகனின் அச்செயல்கள் சில பிடிக்கவில்லை. பிரான்சீசுக்கு வீரசாகசம் செய்து ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது.

### மகிமைக் காப்பாளர்

அக்காலத்தில் வீரம் மிக உயர்வாகக் கருதப்பட்டது. சிறப்பாக இளைஞர்கள் வீரதீரச் செயல்கள் புரிந்து பேரும் புகழும் ஈட்டுவதில் பெருமை கண்டனர். எனவே இளைஞர்கள் முதல்தரமான போர்க்கவசங்களை தாங்களே தயாரித்துக் கொள்வார்கள்; தலைக்கு தலைச்சீரா, மார்பில் உலோகப் பட்டையாலான மார்புக்கவசம்; ஒரு கையில் கேடயம், மறு கையில் நீண்ட போர்வாள், இடுப்பிற்கு இடைக்கச்சை,

காலுக்கு காலுரையுடன் கூடிய மிதியடி, அத்துடன் பளபளப்பான பட்டாடை, வீரமுடன் ஏறி சுற்றிவர அழகிய குதிரை - இவ்வாறெல்லாம் தாங்களே தயார் செய்துகொண்டு, குதிரைமீது ஏறி பல இடங்களுக்கும் சென்று வருவர். ஏதாவது வீரதீரச் செயல் செய்ய கிடைக்குமா என்று தேடிச் செல்வர். வழியில் காட்டு மிருகம் ஏதாவது வயதானவர்களை, அல்லது பெண்களைத் தாக்குவதைக் கண்டால், உடனே குதிரைமீதிருந்து பாய்ந்து, அந்தக் காட்டு விலங்கிடமிருந்து அந்த மனிதரை விடுவித்து காப்பாற்றுவர். அதில் பெருமையடைவர். இத்தகைய வீரதீரச் செயல் செய்பவருக்கு "மகிமைக் காப்பாளர்" (Knight) என்ற பட்டம் சூட்டுவதுண்டு.

## திருவிழிப்பு

புனித இப்பட்டம் சூட்டும் விழா இரு சடங்குகளைக் கொண்டது. முதல் சடங்கில், விரும்பும் இளைஞனுக்கு போராயுதங்களை அந்தப் பங்கின் ஆயர் அல்லது குருவானவர் கையில் எடுத்து அளிப்பார். அந்த இளைஞன் அந்தப் போராயுதங்களை அணிந்து கொண்டு கோவிலின் பீடத்தருகில் இரவு முழுவதும் தூங்காமல் கண்விழித்திருந்து, மண்டியிட்டு செபித்தவாறு இருக்க வேண்டும். உடல் தளரக் கூடாது. அதிகாலையில் ஆயரோ, குருவோ வந்து அங்கே திருப்பலி நிறைவேற்றுவார்.

திருப்பலி முடிவில் இளைஞன், "எனது உடைவாளை - இறைவனின் சேவைக்காகவும், நெருக்கடி படுவோரின் சேவைக்காகவும் பயன் படுத்துவேன் என உறுதியளிக்கிறேன்" என்பார். அப்போது ஆயர், "புனித மிக்கேல், புனித ஜார்ஜ் இவர்களின் பெயராலும், எல்லாம் வல்ல கடவுளின் பெயராலும் நான் உனக்கு மகிமைக் காப்பாளன் என்ற பட்டம் சூட்டுகிறேன்" எனக்கூறி கை நீட்டி ஆசி அளிப்பார். அந்த இரவுக்கு - விஜில் - திருவிழிப்பு இரவு என்றும் பெயரிடுவர். அந்த இளைஞனுடைய ஆதரவாளர்களும் பட்டம் பெற்றவரை அன்போடு அரவணைத்து "துணிவும், மனவலிமையும் உண்மையும் கொண்டவனாய் இரு" என்று கூறி உடைவாளின் பின் பக்கத்தால் தோளில் தட்டி முத்தமிடுவர்.

## நீயும்

தம்பி தங்கைகளே! நம் நாட்டில் ஜனவரி 26-ம் தேதியில் நமது குடியரசுத் தலைவர் சில வீர தீரச் செயல் செய்த பிள்ளைகளுக்கு அல்லது அத்தகைய பெரியோர் சிலருக்கு பாராட்டி பரிசுகள் வழங்குவதைக் கண்டிருக்கிறோம்; தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறோம். உங்களில் யாராவது அத்தகைய வீர தீரச் செயல் செய்ததுண்டா? பரிசு வாங்கியுள்ளீர்களா? பலே! பாராட்டு!!

2014-ல் நம் தென்னிந்தியாவில் பெருமழை பெய்து, வெள்ளத்தில் அடித்துச் சென்ற ஒருவரை ஓர் இளைஞன் தன் உயிருக்கு அஞ்சாமல் வெள்ளத்தில் குதித்து துணிவுடன் வெள்ளத்திலிருந்து காப்பாற்றியதை நாம் அறிவோம்.

சில பிள்ளைகள் தொடர்வண்டி அல்லது பேருந்தில் பயணம் செய்கிறபோது முன்னாலே இடம் பிடித்து அமர்ந்து கொண்டு வருகிறபோது, அடுத்து ஒரு வயதான பாட்டி, அல்லது உடல் ஊனமுற்ற ஒருவர் உள்ளே வந்து உட்கார இடம் இல்லாமல் தவிக்கிற போது அந்த பிள்ளைகள் (அ) இளையோர் எழுந்து நின்று இடம் கொடுத்து அவர்களை அமரச் செய்வதைப் பார்க்கிறோம். அது நல்ல செயல். அத்தகைய இளையோரை நாம் தற்காலத்து மகிமைக் காப்பாளர் என்று கூறலாம்.

யூனுஸ் என்ற இளைஞர் வெள்ளத்தில் மாட்டி தத்தளித்த கர்ப்பிணிப் பெண்ணை சாமர்த்தியமாக கரைசேர்த்தார் என்பதை பத்திரிகைகளில் படித்தோமே, ஞாபகமிருக்கிறதா?

இயற்கையைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டினால், தற்காலத்து மகிமைக் காப்பாளர் என்று கூறலாமே! இதை உணர்த்தவே திருத்தந்தை பிரான்சிஸ் இதை எட்டாவது இரக்கச் செயலாகக் குறிப்பிட்டுள்ளார். சிந்திப்போம்.

### பிரான்சிஸ்: நினைத்ததும் நடந்ததும்

பிரான்சிசும் மகிமைக் காப்பாளர் பட்டம் பெற வேண்டும் என்ற பெரும் நோக்கத்தோடு 1205-ல் வசந்த காலத்தில் (ஏப்ரல்) புறப்பட்டார். பெற்றோரால் தடுக்க முடியவில்லை. முதல்தரமான போர்க் கவசங்களையும், தரித்துக் கொண்டு, கம்பீரமாக குதிரைமீறி ஏறி போருக்குப் புறப்பட்டார். புண்ணிய பூமியான எருசலேமில் சென்று போர்புரிந்து வெற்றி மாலை சூட புறப்பட்டார். இப்படிப் புறப்பட்ட ஒரு போர்க் குழுவின் தளபதியாக ஜென்டில் என்ற ஒரு வீரன் தலைமையை பிரான்சிஸ் தேர்ந்தெடுத்தார். இந்தத் தளபதி ஜென்டில் என்பவன் தலைமையில் புகழ் ஈட்ட விரும்பினார். ஆனால் வழியிலேயே சில மாற்றங்களை ஏற்படுத்த கடவுள் திட்டம் இருந்தது.

### போர் ஆடை களைந்து ஏழ்மை ஏற்றது

தன்னைப் போலவே போர் புரிந்து புகழ் ஈட்ட விரும்பி போர்க்கோலம் பூண்டு வந்த ஓர் இளைஞனை வழியில் சந்திக்க நேர்ந்தது. அவ்விளைஞனோ வறுமையின் கொடுமையால் மெலிந்து, தன் வீரத்திற்குத் தகுந்த போர்க்கவசங்களையும் ஆயுதங்களையும் மற்றும் ஆடைகளையும் தரிக்காமல் காணப்பட்டான். அது கண்டு பிரான்சிசின் மனம் வருந்தியது. தன் உணவைக் கொடுத்தார். கிறிஸ்துவின் அன்பிற்காக தான் அணிந்திருந்த போர்க் கவசங்களையும் - அழகிய வேலைப்பாடு களாலான ஆடைகளையும் அந்த ஏழை வீரனுக்குக் கொடுத்துவிட்டார். ஏழையாக நின்றார். பயணம் நின்றது.

### அசரீரி வழி ஆட்கொள்ளல்

வழிப்பயணத்தின்போது ஸ்பொலேட்டோ என்ற இடத்தில் பிரான்சிஸ் இரவைக் கழிக்க தங்க வேண்டி இருந்தது. அன்றிரவு அவருக்கு ஓர் அசரீரி

வாக்கு கேட்டது. அதில் பிரான்சிஸ் தற்போது பின்பற்றிச் செல்லும் தலைவன் ஜென்டிலால் உண்மைப் பயன் ஏதும் கிட்டாது எனக் கூறியது. உண்மையான தலைவர் உலகின் தலைவர் வேறு ஒருவர் உள்ளார் என்று சுருக்கமாக அக்குரல் கூறியது. அவரைப் பின்பற்ற வழிகாட்டப்படும் என்று கூறியது. பிரான்சிசுக்கு ஒன்றும் புரியவில்லை. மனக்குழப்பம் அடைந்தார்.

குதிரையின் மேலிருந்து கீழே விழத்தாட்டப்பட்ட புனித பவுல் திருத்தூதரைப் போலவே பிரான்சிசுக்கும் புதுவழிகாட்ட ஆண்டவர் இயேசு பிரான்சிசிடம் அசரீரியாகப் பேசியுள்ளார். திருத்தூதரான பவுல் எருசலேமிருந்து தமஸ்கு நகர் சென்று அங்கிருந்த கிறிஸ்தவர்களை வதைக்கும் நோக்குடன் குதிரையில் சென்றார். அவரைத் தடுத்து நிறுத்தி நற்செய்தி அறிவிப்புப் பணிக்குச் செல்ல உயிர்த்த ஆண்டவர் இயேசு அசரீரியாகப் பேசி திசை திருப்பினார். அதுபோலவே, பிரான்சிசுடன் ஆண்டவர் இயேசு அசரீரியாகப் பேசியதை பிரான்சிஸ் உணர முற்பட்டார். எலி வேட்டைக்குப் போகாதே! நீ பிறகு புலி வேட்டைக்குப் போகலாம் என அசரீரி கூறிய பொருளை உணர்ந்தார்.

### ஏழ்மையை மணந்துகொள்ளல்

பிரான்சிசின் வாழ்க்கைப் பாதையை நல்வழியில் திருப்ப மற்றும் ஒரு காட்சியை கடவுள் காண்பிக்கலானார். பிரான்சிஸ் ஒரு கனவில் தன் தந்தையின் வீடும், துணிக்கடையும் மிக அழகாக அலங்கரிக்கப் பட்டிருப்பதை முதலில் காண்கிறார். அடுத்தக்கணம், துணிக்கடையிலிருந்து அழகிய ஆடைகள் பட்டுத்துணிகள், வேலைப்பாடுடன் கூடிய விலை உயர்ந்த ஆடைகள் கட்டுக்கட்டாக, மூட்டை மூட்டையாக கட்டப்பட்டு இருப்பதைக் காண்கிறார். அடுத்தக் கனம் அந்த துணிக்கட்டுகளும் மூட்டைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றன. உடனேயே அந்தத் துணிக் கட்டுகள் இருந்த இடத்தில் எல்லாம் போர்க் கருவிகளாலான கேடயங்களும் சேணங்களும், ஈட்டிகளும் இருப்பதைக் காண்கிறார். மேலும் அம் மாளிகையின் ஓர் அறையில் ஓர் எளிய உடை உடுத்திய இளம் பெண் ஒருத்தியும், அவளுக்காகக் காத்து நிற்கும் ஒரு வீரனையும் காண்கிறார். அந்த வீரன் தன் சாயலில் இருப்பதையும் இளம் பெண் தன்னையே நோக்குவதாகக் காண்கிறார். கனவு நீங்க கண்விழித்த போது, பிரான்சிசுக்கு மேலும் ஒரு வித மனக்குழப்பம் ஏற்பட்டிருந்தது. தான் செல்ல வேண்டிய புதுப்பாதைக்கான வழிகாட்டியாக இது உள்ளதாக உணர்ந்தார். எனினும் தெளிவு ஏற்படவில்லை. தான் போர் புரிந்து “மகிமைக் காப்பாளன் பட்டம் பெற அறிகுறியோ எனவும் எண்ணலானார். எனினும் இரண்டாம் முறை போருக்கு போவதைக் கைவிட்டு வீடு திரும்பினார்.

### “என் இல்லத்தைப் பழுதுபார்”:

#### பாதி வழியில் வீடு திரும்பிய பிரான்சிசுக்கு மற்றும் ஒரு நிகழ்வு

அசிசி நகரத்துக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் சன்தமியானோ என்றொரு கோவில் இருந்தது. அங்கு சன் தமியானோ என்ற

துறவிகளின் இல்லமும் இருந்தது. மலைச்சாரலில் அக்கோவில் இயற்கைச் சூழலில் அழகுற அமைந்திருந்தது. எனினும் கோவில் சற்று பாழடைந்து காணப்பட்டது. பிரான்சிஸ் அடிக்கடி அங்கு சென்று அதன் பீடத்தண்டையில் மண்டியிட்டு, அருகில் தொங்கிய பாடுபட்ட சுரூபத்திடம் செபிப்பதுண்டு.

ஏழைப் போர்வீரனுக்குத் தனது போர்க்கருவிகளையும் போர் உடையையும் கொடுத்துவிட்ட நிலையை எண்ணி பிரான்சிஸ் நெஞ்சுருகி நின்று ஒன்றும் புரியாத நிலையிலிருந்தார். அடுத்து, கேட்ட அசரீரி குரலில் போருக்குச் செல்லுவதைக் கைவிட்டு வீடுதிரும்ப சொல்வதன் பொருள் புரியாமல் திகைத்தார். மேலுமாக, ஏழ்மையே இளம் மணப்பெண்ணாக தன்னை நோக்குவதும் அழைப்பதும் என்ன அர்த்தம் என்றும் புரியாமல் திகைத்தார். அசரீரியின் அழுத்தமான சொல்லை முன்னிட்டு வீடு திரும்பினார். நிம்மதி பெற வழக்கமாகச் செல்லும் சன்தமியானோ ஆலயம் சென்று செபிக்கலானார். அங்குத் தொங்கிக் கொண்டிருந்த மரச் சிலுவையின் முன் முழந்தாளிட்டு செபிக்கத் தொடங்கினார். 1206ஆம் ஆண்டு அவ்வமயம், சிலுவையில் காணப்பட்ட உருவம் - இயேசு ஆண்டவர் - வாயசைத்துப் பேசினார். “பிரான்சிஸ், நீ போய், பாழடைந்து போகும் என் இல்லத்தைப் பழுது பார்” என்றார். பிரான்சிசுக்கு மெய் சிலிர்த்து ஒரு கணம் தன்னையே மறந்தார்; பின் தன்னிலைக்கு வந்தார்.

அக்காலத்தில் மகிமைக் காப்பாளர்கள் ஆலயங்களைப் பழுது பார்ப்பது வழக்கம். அதுபோல தானும் ஏவப்பட்டிருப்பதாக நம் புனிதர் நினைத்தார். திருச்சிலுவையின் முன் எரியும்படியாக விளக்கிற்கும் எண்ணெய்க்கும் பணம் கொடுத்தார். சன்தமியானோ ஆலயத்தைப் பழுது பார்க்க பணம் சேரிக்கத் தொடங்கினார்.

### மூன்று கோவில்கள்

இடிந்து கிடக்கும் கோவில் கட்டடங்களை பழுது பார்க்கவே இயேசு கூறுகிறார் என்று பிரான்சிஸ் முதலில் நினைத்தார். எனவே தன் தந்தையின் துணிக்கடையிலிருந்து பொருள் மற்றும் பணத்தைக் கொண்டு போய் சன்தமியான் ஆலயம் பழுது பார்க்க, குருவானவரிடம் கொடுத்தார். பிற்காலத்தில் அதை அவருடைய தந்தை தடை செய்தார். எனினும் நினைத்ததை முடிக்க முயன்றார். பிறகு கூலி வேலை செய்து பொருள் திரட்டி அந்த ஆலயத்தை சீர்செய்தார்.

அதுமட்டுமல்ல பியத்றோடெல்லா ஸ்பீனா என்ற ஒரு சிற்றாலயத்தையும் அவ்விதமே பழுது பார்க்கலானார். அதேபோல விண்ணவர்களின் தூய மரியாள் என்ற பேராலயத்தின் மையமாக விளங்கும் போர்சியுங்குலா என்ற சிற்றாலயத்தையும் பழுதுபார்த்தார். போர்சியுங்குலா என்ற சொல்லுக்கு பரிபூரண பலன் என்றும் பொருள். இந்த ஆலயம் ஒரு காட்டுக்குள் பாழடைந்து கவனிப்பற்று கிடந்தது.

கோவில் கட்டும் பணிக்கு மற்ற மக்களையும் ஈடுபடுத்தினார். "எனக்கு ஒரு கல் கொடுப்பவன் இறைவனிடமிருந்து ஒரு கைம்மாறு பெறுவான்; இரண்டு கல் கொடுப்பவன் இரண்டு கைம்மாறு பெறுவான்; மூன்று கற்கள் கொடுப்பவன் மூன்று கைம்மாறுகள் பெறுவான்" என்று கூவி கூவி பொருள் சேர்த்து ஆலயங்களைப் பழுதுபார்த்து சீர்படுத்தினார். இப்பணிகளினூடே ஒரு வித துறவு வாழ்வு மேற்கொண்டு, நற்செய்திப்பணி செய்தார். முழு திருப்தியில்லை.

### குழப்பம் தீர்தல்

போர்சியுங்குலா ஆலயத்தை பழுது பார்த்து சீர்திருத்தி கட்டி முடித்த பிரான்சிசுக்கு ஆண்டவர் இயேசு புதிய பாதையைக் காட்டலானார். எருசலேம் கோவிலில் வியாபாரம் செய்து அதன் தூய்மையைக் கெடுத்தவர்களை அடித்து விரட்டினாரல்லவா? அப்போது யூதர்கள் அவரைப் பார்த்து, "இவற்றையெல்லாம் செய்ய உமக்கு உரிமை உண்டு என்பதற்கு நீர் காட்டும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். இயேசு, "இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" என்றாரல்லவா? (யோவா 2:19).

இதை பிரான்சிசுக்கு நினைவுறுத்தியது போர்சியுங்குலா கோவிலின் ஒரு நிகழ்ச்சி. அக்கோவிலில் 1208-ஆம் ஆண்டு புனித மத்தியாஸ் திருவிழாவன்று திருப்பலியில் பங்கேற்றார் பிரான்சிஸ். அன்று திருப்பலியில் வாசிக்கப்பட்ட நற்செய்தி மத்தேயு 10-ஆம் அத்தியாயம் 7 முதல் 12 வரிகளாயிருந்தன. நற்செய்திப் பணியாளர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்த அறிவுரையே அது. "பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் மடியில் வைத்துக் கொள்ள வேண்டாம்" என்ற வசனங்களே இன்றும் நற்செய்தியாளர்கள் கடைபிடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் பிரான்சிஸ். அப்போதே தன்னிடமிருந்த போர்வை, இடைவார் (கச்சை) முதலியவற்றைக் களைந்து விட்டு, மற்றவர் பார்க்க விரும்பாத உருகுலைந்த முரட்டுத் துணியாலான அங்கியை அணிந்து கொண்டு, நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டார்.

### துறவு வாழ்வின் தொடக்கம்

இந்த இறைவார்த்தை பிரான்சிசுக்கு புதிய தெளிவைக் கொடுத்தது. தனக்கு இயேசு சன்தமியானில் கொடுத்த அழைப்பு; ஆலயங்களை - கட்டிடங்களைக் கட்டுவதல்ல. இயேசுவின் மறை உடலான திரு அவையைக் கட்டுவது, அதிலுள்ள குறைகளைச் சீர்படுத்துவதே என்பதைத் தெளிவாக உணர்ந்தார் பிரான்சிஸ். ஏழ்மையில் இப்பணியைச் செய்யவே அழைப்பதாகக் கூறினார். எனவே தன்னிடமிருந்த போர்வை, இடைவார் (கச்சை), மிதியடி ஆகியவற்றைக் களைந்துவிட்டார். Church - கோவில் என்ற கட்டத்தை அல்ல, World Church - உலகத் திருஅவை - இயேசுவின் மறைஉடல் என்ற கோவிலை - சமுதாயத்தைச் சீர்செய்ய புறப்பட்டார் அசிசி நகர் பிரான்சிஸ். புதிய முறையில் துறவு உடை மேற்கொண்டு புறப்பட்டார்.

### ஜான் என்ற பெயர்

**தம்பி தங்கைகளே!**

இங்கு அசிசியாருக்கு அவர் அன்னை விரும்பி அளித்த பெயர் ஜான். ("தொன்" "டான்" "யோவான்") அது புனித திருமுழுக்கு யோவானைப் போல தன் மகன் இயேசுவுக்கு சான்றுபகர வேண்டும் என்று எண்ணி இட்டப் பெயர். அவ்வண்ணம் இதோ நிறைவேறுகிறது என சொல்லலாம் போலிருக்கிறதல்லவா?

உலகத் திரு அவையை சீர்திருத்த 1962-ஆம் வருடம் திருத்தந்தை 23-ஆம் யோவான், இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டினார். அதனால் நம் உலகத் திரு அவை பெரும் நற்பயனடைந்தது. விவிலிய மறுமலர்ச்சி, மறைக்கல்வியில் மறுமலர்ச்சி, திருவழிபாட்டில் மறுமலர்ச்சி பிற சபையாருடன் இணக்கம். உலகிலும் மகிழ்ச்சி!!

12-ஆம் நூற்றாண்டில் உலகத் திரு அவையை சீர்திருத்த (ஜான்) யோவான் எனப் பெயரிடப்பட்ட அசிசி பிரான்சிசை கடவுள் அழைத்தது சிந்திக்கத் தக்கதாக - பொருத்தமுள்ளதாக உள்ளதல்லவா?

### நீயும் நானும்

தம்பி தங்காய்! இறைவார்த்தையைக் கேட்ட அசிசியார் புது வாழ்க்கை முறையைத் தொடங்கினார். நம்மையும் அது சிந்திக்க அழைக்கிறது. சரி அடுத்து பிரான்சிசுக்கு இன்னும் ஒரு நிகழ்ச்சியைத் தந்து அவரை உருவாக்கினார் கடவுள். அது என்ன? நாளை பார்ப்போம். வாருங்கள்.

## நான்காம் நாள்

தம்பி தங்கைகளே! பிரான்சிஸ், அசரீரி வாக்கைக் கேட்டபின் போர் பயணத்தை விடுத்து வீடு திரும்பினார். அப்போது அவருக்கு ஒன்றும் புரியாத ஒருநிலை இருந்தது. தன் வாழ்வின் குறிக்கோள் யாது என முடிவாகக் கண்டுபிடிக்க முடியாமல் திகைத்தார். அதிகமாக செபத்திலும் தியானத்திலும் ஈடுபட்டார். தான் கனவில் கண்ட அந்த எளியப் பெண் யார்? தன் சாயலிலிருந்த அந்தப் போர் வீரன் யார்? மணம் முடிக்க அவள் மணக்கோலத்துடன் காத்திருந்தது பிரான்சிசுக்கு மனதைக் கிளறியது. எளிய ஏழைப்பெண். ஏழ்மையே பெண்ணாக உருவெடுத்துக் காட்சி தந்தது. தான் திருமணம் செய்துகொள்ளாமல் ஏழ்மையையே மணவாட்டியாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்து இதில் இருப்பதாக உணரலானார். அதுவே இறைத்திருவுளம் என முடிவுக்கு வந்தார். இதை உறுதிப்படுத்த நிகழ்ந்தன மேலும் சில நிகழ்ச்சிகள்.

### ஒதுக்கப்பட்டோருக்குப் பணி

உலகத் திரு அவையை சீர் செய்யவே தான் அழைக்கப்படுவதை உள்ளத்தால் உணர்ந்தார் பிரான்சிஸ். மன அமைதி பெற்று ஒரு தெளிவுபெற அதிகமதிகமாக திருவிவிலியத்தை வாசிக்கவும் சிந்திக்கவும் முற்பட்டார். லூக்கா நற்செய்தி 5-ஆம் அதிகாரம் 13-ஆம் வசனம் அவரை அதிகம் தொட்டது. உடலெல்லாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவரை, இயேசு தம் கையை நீட்டி, அவரைத் தொட்டு. . . குணமாக்கியுள்ளார். அதை வாசித்து பிரான்சிஸ் துடிதுடித்துப் போனார்.

தொழுநோய் பீடித்தவர்களின் உடலின் தசைகள் அழுகிக் காணப்படும். அழுகிய அந்தப் புண்களிலிருந்து சீழ்வழியும். காண்போருக்கு அருவருப்பாயிருக்கும். சீழ்வழியும் புண்களிலிருந்து துர்நாற்றம் வீசும். எனவே யாரும் தொழு நோயாளரைக் காணவும் அருகில் செல்லவும் விரும்பாமல் ஒதுங்கி ஓடிவிடுவார்கள். அத்தகைய அருவருக்கத்தக்க தொழுநோயாளியை இயேசு தொட்டு சுகப்படுத்தியுள்ளாரே என்று பிரான்சிஸ் எண்ணி இயேசுவின் இரக்கக் குணத்தை போற்றலானார்.

### தொழுநோயாளரும் பிரான்சிசும்

பிரான்சிஸ் இளைய வயதில் இன்பத்தில் மூழ்கி வாழ்ந்த காலத்தில் தொழுநோயாளர் யாராவது வழியில் வருவதைக் காண நேர்ந்தால், முகம் சுளித்து, அருவறுத்து, குதிரையைத் திருப்பிக் கொண்டு வேறு திசையில் ஓடிவிடுவார். தர்மத்தைக் கூட அவர்களுக்கு வேறு யார் மூலமாகவாவது கொடுத்தனுப்புவார். இயேசுவோ, தொழுநோயாளியைத் தொட்டு சுகம் அருளியிருப்பதைப் பார்த்து இயேசுவின் பெருந் தன்மையையும் மனித நேயத்தையும் திரும்பத் திரும்ப நினைக்கலானார். தொழுநோயாளியும் நம் சகோதரரே என எண்ணினார்.

பிரான்சிஸ், பிற்காலத்தில் ஒருநாள் தொழுநோயாளி ஒருவரை வீதியிலே காணநேர்ந்தது. முதலில் அவ்விடத்தை விட்டு விலகி ஓட நினைத்தார். இயேசு ஆண்டவரின் மனித நேயம் மனதிற்கு வர உடனே மனதை மாற்றிக்கொண்டு, குதிரையை விட்டிறங்கி, அத்தொழு நோயாளியைக் கட்டித் தழுவினார். அவனது கைகளில் சில நாணயங்களை மெல்ல வைத்து புன் முறுவல் பூத்தார். அப்போது பிரான்சிஸ் உடலிலும் உள்ளத்திலும் ஒருவித மகிழ்ச்சி ஊடுருவதை உணர்ந்தார். பிரான்சிசிற்கு அது முழு மனநிறைவு அளிக்கவில்லை. தன் குதிரைமீது பாய்ந்தேறி அருகிலிருந்த தொழுநோயாளிகள் இல்லத்திற்கு விரைந்தார். அங்கிருந்த தொழுநோயாளிகளை ஒன்றுகூட்டி அன்பாக உரையாடலானார். இதற்கு முந்தய நாள்களில் அவர்களை ஒதுக்கி வைத்ததற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

சிறிது நேரம் அவர்களிடம் தங்கியிருந்தார். பிற்காலத்தில் அடிக்கடி அங்கு வந்து, அவர்களுக்குப் பொருள் கொடுத்து, அவர்களுக்கு முத்தமிட்டுச் செல்வதை வழக்கமாகக் கொள்ளலானார். நற்செய்தியை வாசித்தார்; யோசித்தார்; வாழ்வில் கடைபிடிக்க முயன்றார்.

### தொழுநோயாளர் வீட்டில் விருந்துண்ட இயேசு

ஆண்டவர் இயேசு பெத்தானியா என்ற ஊரில் தொழுநோயாளர் சீமோன் என்பவர் வீட்டில் தங்கி அவருடனும் அவரது குடும்பத்தினருடனும் சமமாக அமர்ந்து உணவு சாப்பிட்ட நிகழ்ச்சி மேலும் பிரான்சிஸின் உள்ளத்தைக் கிளறியது (மத் 26:6). தொழுநோயாளர், காலணி செய்து தருவோர், அழுக்குத் துணியை வெளுத்துக் கொடுப்போர், தெரு சுத்தம் செய்வோர் போன்றவர்களை இழிந்தொழில் செய்வோர் என்றும் ஒதுக்கத் தக்கவர் என்றும் மக்கள் மனதில் நினைப்பதுண்டு. அத்தகையவர்களிடம் மக்கள் எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளமாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் கடவுளின் சாபம் பெற்றவர்கள் என எண்ணி - ஒதுக்கி வைப்பது வழக்கம். மற்ற சமூகத்தினரிடையே அவர்கள் வாழ அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஊரின் ஓரத்தில் ஒதுக்குபுறமான இடத்தில் யாருக்கும் தெரியாமல் - பிறர் கண்ணில் அதிகம் படாமல் குடிசையில் வாழவேண்டும் என்ற நியதி இருந்தது. தொழுநோயாளரை முக்கியமாக பிறர்காண நேர்ந்தால் தீட்டு, தீட்டு என்று சொல்லி ஒதுங்குவார்கள். அந்த சூழ்நிலையில், இயேசு தொழுநோயாளியுடன் சமமாக அமர்ந்து அன்பாகப் பேசி உணவு உண்டது, இயேசுவின் பெரிய மனதைக் காட்டுகிறது என பிரான்சிஸ் சிந்திக்கலானார்.

### இயேசு திருத்தூதருக்குப் பயிற்சி

ஆண்டவர் இயேசு தன் திருத்தூதர்களுக்கு நற்செய்திப் பணி செய்ய பயிற்சி அளித்து, அதைச் செயல்படுத்த அவர்களை அனுப்புகையில் முக்கியமாகச் செய்யக் கற்பித்தது:

“நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்; . . . தொழுநோயாளரை நலமாக்குங்கள். . .” (மத் 10:8) என்று தொழுநோயாளர் மீது தனி கவனம் செலுத்த வலியுறுத்திச் சொல்லியனுப்பியதை பிரான்சிஸ் அதிகம் சிந்திக்கத் தொடங்கினார். பிற்காலத்தில் தன் சபையைச் சார்ந்த - சகோதரர்களுக்கும் இதை ஒரு கட்டளையாகத் தந்தார் என்பது சிந்திக்கத் தக்கது.

### திரு அவையின் பணியாகத் தொடர்கிறது

இயேசுவின் இக்கட்டளையை சிரமேற்கொண்டு திரு அவை இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. திருத்தூதரான யாக்கோபு தமது திருமுகத்தில், “உங்களில் யாராவது துன்புற்றால் இறைவேண்டல் செய்யட்டும்; மகிழ்ச்சியாயிருந்தால், திருப்பாடல்களைப் பாடட்டும். உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திரு அவையின் மூப்பர்களை

அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவர் பெயரால் அவர்மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். . . ” (யாக் 5:13-15) என எழுதியுள்ளதும் அதற்கு ஆதாரம். சாதா நோயாளிகளுக்கும், தொழுநோயாளர்களுக்கும் திரு அவை தனிகவனம் செலுத்தி வருவதை நாம் காண்கிறோம். சில இடங்களில் தொழுநோயாளர்களுக்கு மருத்துவமனை வைத்து திரு அவை நடத்தி வருவது கண்கூடு.

தமியான் என்ற ஒரு குருவானவர். தொழுநோயாளர்கள் மத்தியில், தொழுநோயாளர்களுக்குப் பணி செய்து அப்பணியில் தன் உயிரையும் அர்ப்பணித்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இயேசுவின் கட்டளையை நிறைவேற்ற உயிரையும் கொடுத்துள்ளார் புனித தமியான்.

### ஒதுக்கப்பட்டோர் நம் சகோதரர்

பிரியமான தம்பி தங்கைகளே! நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், தொழுநோயாளர்களிடம் தனிப்பட்ட பரிவும் பாசமும் காட்டுவதை நாம் பார்க்கிறோம். தொழுநோயாளிகளை அடிக்கடி சந்திக்கிறார். தனி மருத்துவமனைகளில் தொழுநோயாளரை ஒன்று சேர வரவழைத்து பேசி தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறார். சில முக்கிய சமயங்களில் அவர்களின் பாதங்களைக் கழுவி முத்தமிடுகிறார். ஆண்டவர் இயேசு பெரிய வியாழனன்று சீடரின் காலடிகளைக் கழுவியபின் “நான் செய்ததுபோல நீங்களும். . . ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். . . ” (யோவா 13:14-16) என்ற கட்டளையை முதலில் அசிசி நகர் பிரான்சிஸ் பின்பற்றினார். அவரை அடியொற்றி நம் திருத்தந்தை பிரான்சிஸ் பின்பற்றுகிறார் என்பது உலகறிந்த உண்மை.

மேலும் 2016-ஆம் ஆண்டை இறை இரக்கத்தின் ஆண்டாகக் கொண்டாடப் பணித்து அதிலும் “நோயாளரைச் சந்தித்தல்” என்ற உடல் சம்பந்தமான இரக்கச் செயலைக் கடைபிடிக்க நம்மைத் தூண்டினார். நமது திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரை எடுத்ததன் காரணம் நமக்கு சிறிது விளங்க வருகிறதல்லவா? திரு அவை இன்றும் ஆற்றவேண்டிய பணியாக இயேசுவின் கட்டளையை, திருத்தூதர்களின் கட்டளையை நிறைவேற்றி வருகிறது.

தம்பி தங்கைகளே! எங்கள் பங்கு தந்தை செய்த ஒரு புரட்சிகரமான செயலையும் இது தொடர்பாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### திரு அவையில் தொடரும் பணி – இன்றும்

அருள்பொழிவு பெற்று குருவானராகிடும் குருக்கள், தாங்கள் மறுநாள் நிறைவேற்றும் முதல் திருப்பலிக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் தருவார்கள். அதை வெகு ஆடம்பரமாக சிறப்பாக பெருமையுடன்

பெரிய எண்ணிக்கை உள்ள மக்கள் மத்தியில் கொண்டாட விரும்புவர். அதுவும் தம் பெற்றோர் உற்றார் உறவினருடன், சொந்த ஊரில் முதல் திருப்பலி நிறைவேற்ற விரும்புவர். அது சமயம் புதிய குருவுக்கு பாராட்டுகளும் பல பரிசுப் பொருள்களும் கூட கிடைக்கும். அப்படி இருக்க எங்கள் பங்கு குரு சில ஆண்டுகளுக்கு முன்பு தான் குரு பட்டம் பெற்று, தனது முதல் திருப்பலியை தொழுநோயாளர் விடுதியில், தொழுநோயாளர்கள் மத்தியில் நிறைவேற்றினார். தன் புனித கையால், தொழுநோயாளர் கையில், நாவில் - நற்கருணை வழங்கினார். தொழுநோயாளர்களுக்கு அளவிலா மகிழ்ச்சி. நற்கருணை வாங்கமுடியாத நோயாளர்களுக்கு அறுசுவை விருந்து படைத்தார் புதிய குரு, அவர்களுடன் உணவு உண்டார். மாதம் ஒரு முறை தொழுநோயாளர் மருத்துவமனை சென்று அவர்களுடன் உரையாடுவது வழக்கமாகக் கொள்கிறார்.

### நீ – நான் – நாம்

சரி, தம்பி தங்கைகளே! தொழுநோயாளர் உங்கள் வீடுவந்து பிச்சை கேட்டால் என்ன செய்கிறீர்கள்? முகம் சுளித்து, எட்டி நின்று, பிச்சைப் போடுகிறீர்களா? அது அந்த தொழுநோயாளரை மனம் வருந்தச் செய்யுமல்லவா? அவர்கள் மனம் மகிழ என்ன செய்யலாம் - யோசித்துப் பாருங்கள்.

அசிசி நகர் பிரான்சிஸ் நற்செய்திப் பணி செய்வதில் உறுதிப்பட அவர் வாழ்வில் நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சி என்ன தெரியுமா? அது மிக முக்கியமானது. நாளைக்கு அதைப் பற்றிய பார்ப்போம்; வாருங்கள்!!

# ஐந்தாம் நாள்

## பிரான்சிசின் சிறப்பு அழைப்பு - சபைகள் அமைப்பு

### இளகிய மனம்

இளமைத் துடிப்பும், வீட்டின் செல்வச் செழிப்பும், பிரான்சிஸ் உலக வாழ்வில் மூழ்கிவிடுமளவுக்கே இருந்தன. எனினும் அவருடைய தாயின் கண்டிப்பும், இறைவார்த்தை வாசிப்பும் இடைமறிக்கலாயின.

இயல்பாகவே பிரான்சிஸ் இரக்ககுணமிக்கவராயிருந்தார். தர்மங்கள் செய்யத் தயங்கமாட்டார். கோவிலுக்கோ, குருக்கள், அருள்கன்னியர்களின் சேவைகளுக்கோ பலவிதங்களில் பொருளுதவி செய்வதில் ஆர்வங் காட்டினார். வறியவர் வந்து உதவி கேட்டால் வாரிவழங்கிவிடுவார். ஒருமுறை தன் தந்தையின் துணிக்கடையில்

மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, தன்னிடம் ஒரு பிச்சைக்காரர் வந்து பிச்சைக் கேட்டார். வியாபாரத்தைக் கெடுப்பதாக எண்ணி, பிச்சைக்காரரை திட்டி விரட்டிவிட்டார். பிறகு அதை எண்ணி மிகுந்த மன வருத்தம் கொண்டார்.

"ஒரு தளபதி பெயரால் அல்லது ஒரு பிரபு பெயரால் உன்னிடம் வந்து பிச்சைக் கேட்டிருந்தால், நீ விரட்டியடித்திருக்கமாட்டாய்; அது உன் பெருமை; அதற்கு பதில் அவருக்கு பொருளைத் தந்து அதில் பெருமை பட்டிருப்பாய். வந்தவர் இயேசு பெயரால் பிச்சை கேட்டார். நீ விரட்டி அனுப்பிவிட்டாய். அரசர்க்கெல்லாம் அரசராய் விளங்கும் கிறிஸ்து அரசர் அனுப்பிய ஒருவரை விரட்டிவிட்டாயே" என்று தனக்குள் கூறிக்கொண்டு வருத்தப்பட்டார் பிரான்சிஸ். பிறகு அந்தப் பிச்சைக்காரரைத் தேடிச் சென்று கண்டுபிடித்து, அவருக்குத் தேவையான பெரும் பொருள் கொடுத்து, தான் உணராது செய்த தவறுக்காக வருந்தி மன்னிப்பும் பெற்றார். பிரான்சிஸ் பணக்காரராயிருந்தும் இளகிய மனம் கொண்டவர். இறைவார்த்தை வாசிப்பதில் ஆர்வமுடையவர்.

### இறைவார்த்தை ஒளி

"ஏழைகளே! நீங்கள் பேறுபெற்றோர்" (லூக் 6:20); "செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" (லூக் 18:25) ஆகிய இறைவார்த்தைகளை ஊன்றி சிந்தித்தார். மேலும் ஒதுக்கப்பட்டவர்கள் மீதும் ஏழைகள் மேலும் பிரான்சிசுக்கு அன்பு அதிகரிக்கலாயிற்று. ஊரைச் சுற்றிப் பார்க்க செல்லுகையில் ஏழை எளியவர்களைக் காணும்போது தன்னிடமுள்ள பணம், ஆடைகளையும் கூட எடுத்துக் கொடுத்துவிட்டு அரைமனிதனாக வீடுதிரும்புவது வழக்கமாயிற்று.

### உரோமைப் பிச்சைக்காரர்

இச்சூழலில் பேதுரு பேராலயத்தை தரிசிக்க பிரான்சிஸ் உரோமைக்கு திரு யாத்திரை மேற்கொண்டார். இவர் புனித பேதுரு கல்லறையை அடைந்தபோது, அங்கு திருப்பயணிகள் ஒருசில சில்லறைக் காசுகளை காணிக்கையாக வீசி எறிவதைக் கண்டு பெரிதும் ஏமாற்றமடைந்தார். இயேசு அரசரின் பிரதிநிதியான திருத்தூதரை மதித்துப் போற்றும் முறை சரியல்ல என நினைத்தார். தான் வைத்திருந்த பொற்காசுகள் நிறைந்த தனது பையை பலிபீடத்தில் காணிக்கையாகத் தந்தார். பலர் இவரைப் பாராட்டினர்.

திருப்பலி முடிந்து வெளியே வந்தபோது, ஆலய முகப்பில் அனேக பிச்சைக்காரர்கள் அங்கே கோவில் முகப்பில் அமர்ந்து பிச்சை யெடுப்பதைக் கண்டார். மனம் இளகினார். உடனே அவருடைய சிந்தனை ஓட்டம் மாறியது. தான் அணிந்திருந்த உயர்ந்த ஆடைகளை மாற்றிக்கொண்டு பிச்சைக் காரர்களில் ஒருவராக அமர்ந்து பிச்சை எடுக்க ஆரம்பித்தார். அது இவருக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது; ஒருவித

மகிழ்ச்சியையும் தந்தது என்கிறார். தன் குடும்பத்தின் உயர்நிலைக்கு இழுக்கேதும் வராதிருக்க, மறுநாளில் தன் ஆடையை மாற்றிக்கொண்டு வீடு திரும்பினார். இயேசுவுக்குச் சிறந்த முறையில் பணிசெய்ய ஏழ்மை நிலையே மிகவும் ஏற்புடையது என்ற ஒரு முடிவுக்கு வர எண்ணினார்.

அது சுலபமானதல்ல என்றும் நினைத்துப் பார்த்தார். தன்னிடமுள்ள செல்வம் - பணம் முதலியனவற்றைத் துறந்துவிட வேண்டும்; மற்றவர்கள் மதிக்கமாட்டார்கள்; இழிவாக எண்ணிப் பேசுவார்கள்; அது அவமானமாக இருக்கும். அதைத் தாங்கிக் கொள்ளுவது மிகவும் கடினமாயிருக்கும்; உணவுக்கும் உடைக்கும் தங்க இடத்துக்கும் மிக அலைந்து துன்பப்பட வேண்டியிருக்கும். இவ்வாறெல்லாம் ஆழ்ந்து சிந்தித்த பிரான்சிஸ், ஏழ்மையில் பிறந்து ஏழையாக வாழ்ந்து, அநாதை ஏழையாக மரித்த இயேசுவை முன்னிட்டு, தானும் ஏழ்மையை ஏற்பதென முடிவு செய்தார்; ஏழ்மையே தனது மணப்பெண் என்று முடிவாக கூறலானார். வீடுவந்த பிரான்சிஸ் நடையுடை பாவனை அதிகம் மாறியது. ஏழையாகக் காட்சியளித்தார். வீட்டின் செல்வங்களை ஏழை எளியவர்களுக்கு வாரி இறைக்கத் தொடங்கினார். நடமாடும் போதகராகி நற்செய்தி அறிவிக்கும் துறவியானார்.

### பதுங்கிய வாழ்வு

பிரான்சிஸ் சாக்குடை அணிந்து உடல் மெலிந்து, முகப்பொலிவு இழந்தவராய், சில இடங்களில் பிச்சை எடுப்பதைப் பற்றியும் தந்தை பீட்டர் பெர்னார்டோன் கேள்விப்பட்டார். கடும் கோபம் கொண்டவராய் பிரான்சிசைத் தேடி பிடித்துக் கொண்டு வந்து தன் வீட்டில் சேர்க்க சிங்கம் போல் சீறி எழுந்து புறப்பட்டார். இதை அறிந்த பிரான்சிஸ் தன் நண்பர் ஒருவர் வீட்டு அகழிப் பள்ளத்தில் மறைந்து கொண்டார். தந்தையால் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிவிட நேர்ந்தது. இப்படி ஒருமாத கால மறைந்த வாழ்வில் ஆதரவாளர் சிலர் இரகசியமாகக் கொண்டுவந்து கொடுத்த குறைந்த உணவை உண்டு ஏழ்மை - நற்செய்திப் பணி என்ற தன் திட்டத்தை நிறைவேற்றினார். இறைவனிடம் செபித்து தன் திட்டம் நிறைவேற கேட்டார்.

### வீட்டில் சிறைவாழ்வு

மகன் அகழியில் பதுங்கி வாழும் இரகசியத்தை தந்தை அறிந்து சென்று, கண்டுபிடித்து விடாப்பிடியாக கட்டி இழுத்து வந்தார். வீட்டிலும் ஒரு சங்கிலியால் கட்டி ஒரு தனி அறைக்குள் தள்ளி பூட்டி விட்டார். சாப்பாடு, தண்ணீர் எதுவும் கொடுக்கக் கூடாது என கண்டிப்பாகக் கூறிவிட்டார். அப்படி இருந்தும் பிரான்சிஸ் மனம் அசையவில்லை என்பதை அறிந்து, எப்படியாவது, மகனை நாடு கடத்தி தன் குடும்ப கவுரவத்தைத் தக்க வைத்துக் கொள்ள திட்டமிட்டார்.

தாய் பீக்கா அம்மையார், செய்வதறியாது திகைத்தார். தன் தந்தைப் பேச்சைக் கேட்டு பிடிவாதத்தை விடச் சொன்னார். மகன்

விடாப்பிடியாக தன் நோக்கில் இருப்பதைக் கண்டு, தந்தைக்குத் தெரியாமல் தன் மகனை எப்படியாவது விடுதலை செய்ய எண்ணினார்.

### விசித்திரவழக்கு

ஏழ்மையில் நற்செய்தி அறிவிப்பது என்ற எண்ணத்தில் விடாப் பிடியாயிருக்கும் தன் மகனை திரு அவை அதிகாரிகள் வழியாகவே தன் வழிக்குக் கொண்டு வர முடியும் என எண்ணினார். எனவே பீட்டர் பெர்னார்டோன் அசிசி நகர ஆயர் குவிடோ அவர்களிடம் சென்று தன் மகனைப் பற்றி முறையிட்டார். "தந்தைச் சொல் கேளாத தனயன். குடும்ப கவுரவத்தைக் குலைக்கும் கொடியவன். அவனைக் கண்டித்துத் திருத்தி என் சொல்படி நடக்கக் கூறுங்கள்" என்று வேண்டினார். பிரான்சிஸ் எண்ணத்தை ஆயர் அறிந்தார். ஆயர், "நீ திரு அவைக்கு சேவை செய்ய விரும்பினால், உன்னிடத்தில் இருக்கக் கூடிய, உனக்கு உரிமையில்லாத பொருள்களை உன் தந்தையிடம் திரும்பத் தந்துவிடு. அதன்மூலம் அவரது கோபத்தையும் தணித்து விடலாம்" என்றார்.

பிரான்சிஸ் ஆணித்தரமாக, "ஆயரவர்களே, நீங்கள் கூறியபடி நடப்பேன்" என்று கூறி, ஆயர் இல்லத்திற்குள் சென்று தன் ஆடைகளை எல்லாம் களைந்தார். அதைக் கையில் எடுத்துக் கொண்டு முழு நிர்வாணமாக வந்து அங்குநின்றவர்களைப் பார்த்து "இதுவரை நான் பீட்டர் பெர்னார்டோனை தந்தையென அழைத்து வந்தேன். ஆனால் இனி விண்ணகத் தந்தை மட்டுமே என் தந்தையாகிறார். என்னிடமுள்ள அவருடைய இந்த உடைகளையும் அவரிடத்திலே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என உடைகளையும் வீசியெறிந்தார். ஆயர், தன் போர்வையால், பிரான்சிசை மூடினார். பீட்டர் பெர்னார்டோன் செய்தவறியாது வெளியேறினார். நற்செய்திப் பணிக்காக பணம், சொத்து, உறவினரையும் முழுமையாகத் துறந்தார் பிரான்சிஸ். புதிய முறையில் நற்செய்தி அறிவிப்புப் பணி செய்யத் தொடங்கினார். கூலி வேலை செய்து நற்செய்திப் பணி செய்ய தொடங்கினார். ஆயரும் அனுமதித்தார்.

### பிரான்சிஸ்கன் சபையும் சகோதரர்களும்

துறவு உடை அணிந்து நற்செய்திப் பணி செய்ய புறப்பட்டார் பிரான்சிஸ். அவர் அணிந்திருந்த உடை, ஒரு புது வழிகாட்டியைப் போல காட்சியளித்தது. பலர் அவரிடம் வந்து ஆலோசனைக் கேட்டனர். சில மாதங்களில் 12 பேர் அவருடைய சீடர்களாயினர். எளிமையில் ஏழ்மையைப் பின்பற்றி, நற்செய்தி அறிவிக்க விருப்பம் தெரிவித்தனர். இயேசுவின் திருத்தூதர் 12 பேரை நமக்கு நினைவூட்டுகின்றனர் அல்லவா? இவர்கள் ஏழ்மையைக் கைக்கொண்டு, நிலைத்து வாழ்வாரா என்று நினைக்கத் தோன்றியது பலருக்கு. எனினும் சிலருடைய வீடுகளிலும் வயல்களிலும் கூலி வேலை செய்து பொருளீட்டி, நற்செய்திப் பணி செய்வதில் ஆர்வம் காட்டியது ஆச்சரியத்தைத் தந்தது. பிரான்சிஸ் உழைக்க, ஒறுத்தல் செய்ய, செபிக்க, நற்செய்தி, மறையுரை ஆற்ற

இவர்களுக்குப் பயிற்சிகள் தந்தார். பிறகு அவர்களை இருவர் இருவராக வெவ்வேறிடங்களில் சென்று தங்கி நற்செய்திப்பணி செய்ய அனுப்பி வைத்தார். அசிசி நகரத்தார் இந்தக் குழுவினரைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். எனவே திரு அவையின் ஒப்புதலை தம் குழுவினர் பெற வேண்டும் என பிரான்சிசும் விரும்பினார்.

### பிரான்சிஸ்கன் சபை – ஒழுங்குமுறைகள்

தன்னைப் பின்பற்றி துறவு வாழ்வுடன் நற்செய்திப் பணி செய்ய வருபவர்கள் எண்ணிக்கைப் பெருகியது. பிரான்சிஸ் சில ஒழுங்கு சட்ட திட்டங்களை எழுதலானார். இயேசு ஆண்டவர் கூறியுள்ள நற்செய்திப் பணியாளர் ஒழுங்கையே பின்பற்ற பிரான்சிஸ் விரும்பினார். ஏழ்மை - தூய்மை - வழி போதனைப் பணி செய்ய திட்டமிட்டார்.

- **உடை:** அங்கி தலைக்குல்லாயுடன் - இடையில் நூல் கயிறு. தாங்களே பழுதுபார்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.
- **தகுதி:** சபையில் ஒருவர்மேல் ஒருவர் அதிகாரம் செலுத்தலாகாது. சகோதரர் என்றே அழைக்க வேண்டும்.
- **பிறரன்பு:** தாழ்ச்சி தேவை; முணுமுணுப்பது கூடாது. வாதிடுவதும் கூடாது.
- **வேலை:** வேலை செய்து நற்செய்திப் பணி செய்ய வேண்டும். தேவையானால் யாசிக்கலாம். உணவு - உடை மட்டும் ஏற்றுக் கொள்ளலாம். பணம் ஏற்கலாகாது. தங்களுக்கென எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது. வசிக்கும் குடிசைமீதும் உரிமை பாராட்டலாகாது. நோயாளருடனும் பிறயாசகர்களோடும் கலந்து பழக வேண்டும்.

ஓர் இல்லத்திற்குச் செல்லும்போது, “இவ்வில்லத்திற்குச் சமாதானம் உண்டாவதாக” என்று கூற வேண்டும். இப்படியாக, சபையில் சேர்வோர் இயேசு கூறிய நற்செய்திப் பணியாளர் ஒழுங்கு முறையை மிக கண்டிப்பாக பின்பற்ற விரும்பினார்.

### திரு அவை அனுமதி

பிரான்சிஸ்கன் சபை நன்கு வளர்ந்தது. மக்கள் மத்தியில் வரவேற்பு மிகவே பெற்றது. பிரான்சிஸ் தன் சபைக்கு திரு அவையின் அனுமதிபெற வேண்டி அன்றைய திருத்தந்தை மூன்றாம் இன்னோசென்னடிடம் சென்றார். திருத்தந்தை இச்சபை ஒழுங்குகளும் சகோதரர் நடையுடை பாவனையும் காலாகாலத்துக்கும் நீடிக்குமா? நிலைக்குமா என சிந்திக்கலானார். அசிசி நகரின் ஆயர், இந்த சபையினர் பற்றி நற்சான்று பகர்ந்து ஒப்புதல் பரிந்துரை செய்தார். 3-ஆம் இன்னோசென்ட் 1209-ல் ஒப்புதல் தந்தார்.

### எளிய சகோதரர்கள்

நாளாவட்டத்தில் பிரான்சிசின் சீடர் குழு பெருகியது. சீடர்களின் துணை கொண்டு பிரான்சிஸ் மேலும் சில ஒழுங்குகளை உருவாக்கினார். சபையினர் இறைவன் முன் தன்னை தாழ்த்தி பணி செய்வதே முக்கியம் என்றார். தன் சீடர்கள் சகோதரர்களாக பிறருக்குச் சேவை செய்ய வேண்டும் என பிரான்சிஸ் விரும்பினார். எனவே அவர்கள் சகோதரர்கள் என்றே அழைக்கப்பட்டனர். சகோதரர்கள் தங்களை மற்றவர்களைவிட சிறுமையானவர்கள் என்றும், தாழ்ந்தவர் களாகவும் கருதவேண்டும் என்று ஆசித்தார். எனவே "சிறிய சகோதரர்கள்" என தன் சபையினரை அழைக்க வேண்டும் என மாற்றிக் கூறினார். இயேசுவைப் போல தன்னைத் தாழ்த்தி சகோதரர்கள் பணி புரிய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பிரான்சிசின் சிறிய சகோதரர்கள் ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்கும் சென்று பணி புரியலாயினர். மேலுமாக ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களுக்கும் சென்று நற்செய்திப் பணிசெய்து இயேசுவை அறிவித்தனர்.

### டன்ஸ்கோட்டஸ்: புனித பெனவந்தூர்

பிரான்சிஸ் தொடங்கிய துறவு சபையில் பணக்காரர்களும் பெரிய அறிவாளிகளும் கூட சேர்ந்தனர். அவர்களும் சிறிய சகோதராகள் என்றே அழைக்கப்பட்டனர். 1229-ல் சில சகோதரர்கள் கல்விச் சாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியர்களாகப் பணிபுரிந்து பேரும் புகழும் ஈட்டினர். புனித பெனவந்தூர் பெரிய இறையியல் வல்லுநராக திகழ்ந்தார். அதுபோலவே இறைவனின் தாய் மரியா ஜென்மப் பாவம் எனப்படும் பிறப்பு நிலைப் பாவமின்றி பிறந்தவர் என்பதை சகோதரர் டன்ஸ் ஸ்கோட்டஸ் என்ற இறையியல் வல்லுநர், தன் பேச்சாற்றலாலும் எழுத்துவன்மையால் நூல்கள் எழுதியும் நிலைநாட்டினார்.

### புனித பதுவா அந்தோனியார்

புனித அந்தோனியார் புதுமை வள்ளல் என்றும், கோடி அற்புதர் என்றும், காணாத பொருள்களை கண்டடையச் செய்ய வல்லவர் என்றும் மக்களால் புகழ்ந்து வணங்கப்படுபவர் (கி.பி. 1195 - 1231). இவர் ஸ்பெயின் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்தவர். அகுஸ்தீனியன் சபையில் குருவாக அருள்பொழிவு பெற்றவர். 1220-ல் மொரொக்கோவில் (ஆப்ரிகா) மறைச்சாட்சியராய் மரித்த பிரான்சிஸ்கன் துறவிகளின் சடலங்கள் இத்தாலியில் அடக்கம் செய்யப்பட கொண்டு வரப்பட்டன. அந்தோனியாரும் அத்துறவிகளைப் போல மறைச்சாட்சி முடி பெற விரும்பினார். எனவே அகுஸ்தீனின் சபையை விட்டு விலகி பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தார். பெரிய படிப்பாளி, அறிஞர் தம் சபையில் சேர்ந்து தாழ்ச்சியாய் எளிய சகோதரராய்ப் பணிபுரிவதை பிரான்சிஸ் விரும்பினார். அந்தோனியாரும் பிரான்சிசைப் போல இயற்கையை நேசித்தார். பறவைகளுக்கும், கடல் மீன்களுக்கும் நற்செய்தியை போதித்தார்.

பதுவா என்ற ஊரில் மரித்து அடக்கம் செய்யப்பட்டார். நற்செய்தியை பல்லாற்றலாலும் அறிவித்த அவருடைய நாக்கு இன்றும் அழியாமல் பதுவா என்ற ஊர்கோவிலில் உள்ளது. இயற்கையை நேசித்தப் புனிதர் அசிசியாரும் இயற்கை நேயரல்லவா?

## பிறநாடுகளில் மறைபரப்புப்பணி

பிரான்சிஸ்கன் சபை என்ற பெயர் பெற்று பொதுவில் இச்சபையின் எளிய சிறிய சகோதரர்கள் சில ஒழுங்குமுறைகளை அமைத்துக் கொண்டு பணிபுரிய வேண்டியதாயிற்று. பிரான்சிசும், சமயா சமயம் புதுப்புது ஒழுங்குகளை தன் சபை சகோதரர்களை ஒன்று கூட்டி ஆலோசித்து சபை வாழ்வையும் பணிகளையும் காலத்திற்கேற்ப அமைத்தளித்தார். 1217-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கூட்டத்தைத் தொடர்ந்து, இத்தாலிக்கு வெளியே - ஐரோப்பா - ஆப்பிரிக்கா - ஆசிய நாடுகளிலும் சென்று நற்செய்திப் பணியாற்ற தொடங்கப்பட்டது. இருவர் இருவராகவே பணிக்குச் செல்ல வேண்டும். இவ்வீட்டிற்கு சமாதானம் உண்டாவதாக என முதலில் கூற வேண்டிய வாழ்த்துதலையும் பிரான்சிஸ் நினைவுறுத்தினார்.

சில நாடுகளில் இச்சிறிய சகோதரர்களின் எளிய உடையைக் கண்டு இவர்கள் கடவுள் பெயரால் ஏமாற்றும் பிச்சைக் காரர்கள் என எண்ணி விரட்டியடித்தனர். சில இடங்களில் நாய்களை இந்த எளிய சகோதரர்கள் மீது ஏவிவிட்டனர். ஜெர்மனி நாட்டில் அந்த நாட்டு மொழியைக் கற்க முதலில் கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆம் என்ற ஒரு சொல்லை மட்டும் கற்றுக்கொண்டு, கூலி வேலை செய்யவும், நற்செய்திப் பணி செய்யவும் முயன்றனர். Ja - யா - என்பது ஜெர்மனியில் 'ஆம்' என்ற சொல்லாகும். பசிக்கிறதா, சாப்பாடு வேண்டுமா என்று கேட்டபோது (Ja) - ஆம் என்று கூறி உணவு பெற்று சாப்பிட்டனர். மறுநாள் ஜெர்மனி நாட்டை அழிக்கவா வந்துள்ளீர்கள் என்று கேட்டபோதும் Ja -ஆம் என்றுகூறி அடி உதை பட்டனர் என குறிப்பு ஒன்று கூறுகிறது.

இந்தியாவில் வந்தும் பிரான்சிஸ்கன் ஏழை சகோதரர்கள் நற்பணி ஆற்றியுள்ளதைக் காண்கிறோம். தமிழ்நாட்டில், திண்டிவனம் அருகில் சாரம் என்ற இடத்திலும், சந்தைமேடு என்ற இடத்திலும் சிறந்த ஓர் உயர்நிலைப் பள்ளி வைத்து நடத்துகின்றனர். கேரளாவிலும் இவர்களது மடம் சிறந்த ஆன்மீகப் பயிற்சி மையமாக விளங்குகிறது.

பிரான்சிசின் ஏழ்மை, நற்செய்தி அறிவிப்பு என்ற ஆன்மீகத்தின் அடிப்படையில், மிகப் பிற்பட்ட காலத்தில் கப்பூச்சின் சபை என்ற ஒரு தனி சபை தொடங்கப்பட்டு மறையுரை ஆற்றும் சிறப்புப் பணியை மேற்கொண்டு தனித்தியங்கி வருகிறது. மரியன்னையின் மாசற்ற இதயா கன்னியர் சபையும், கொன்சாகா கன்னியர் சபையும்கூட பிற்காலத்தில் பிரான்சிஸ்கன் ஆன்மீகத்தில் தொடங்கி பணிசெய்துவரும் பிற்காலத்து இரண்டாம் சபைகளாகும். பிரான்சிசின் இன்னும் இரு சிறப்புகளை நாளை படிப்போமா?

# ஆறாம் நாள்

## ஏழ்மையில் பரிசு-மகிமை காயங்கள்

தம் தலைவர் பிரான்சிசின் எளிய வாழ்வைப் பின்பற்றி அவர் வழியிலேயே வாழத் தலைப்பட்ட சகோதரர்கள் உண்மையிலேயே எளிய ஏழ்மையைப் பின்பற்றினர். சகோதரர்கள் தங்களின் பிழைப்புக்காக அரச மாளிகையிலும், உயிர்குடியினர் இல்லங்களிலும் பணிபுரியலாயினர். தன் சகோதரர்கள் செல்வந்தவர் வீடுகளில் வேலை செய்து பொருளீட்டி நற்செய்திப் பணி செய்கையில், உலக ஆசையால் கவரப்படலாகாது என அவர்களை மிக கவனமாயிருக்க பிரான்சிஸ் எச்சரித்தும் வந்தார். சகோதரர்களில் சிலர் அரசமாளிகையில் தங்கி அவர்களுக்குப் பணிபுரிந்து நற்செய்திப் பணியாற்ற சென்ற போது, சில இடங்களில் தாமே சென்று சகோதரர்களின் வாழ்க்கை முறையில் பங்கேற்க நேர்ந்தது. அத்தகைய சமயங்களில் பிரான்சிஸ் மாட்டுக் கொட்டகைகளிலேயே தங்கி முன்மாதிரி காட்டியுள்ளார். தன் சகோதரர் ஆஞ்சலோவை சந்திக்க சென்றபோது ஆஞ்சலோ தங்கி கூலி வேலை செய்த அரண்மனையில் தங்காமல் அந்த அரண்மனையின் தோட்டத்தில் இருந்த கொட்டகையில் தங்கினதை சகோதரர் ஆஞ்சலோ வாழ்க்கை வரலாற்றில் காண்கிறோம்.

## தொழுவத்தில் தோன்றிய சீமான் - சிந்தனை

உலகைப் படைத்த இறைமகன் இயேசு ஏழைக் குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்? உலகை மீட்க ஏழ்மையே சிறந்த வழி என்று காட்டவே! மாட்டுத்தொழுவத்தில் பிறந்தது ஏன்? மக்களை மீட்கவே. இதை உணர்த்த இயற்கை எழிலில் இயற்கையுடன் கிறிஸ்மஸ் கொண்டாட அசிசியார் தன் அனுபவங்களை எண்ணிப்பார்த்தார்.

## ஏழ்மையில் இறைமகன் பிறப்பு

பிரான்சிசின் இயற்கையை நேசித்த எளிய வாழ்வினால் அனேகர் கவரப்பட்டனர். சபை வளர்ந்தது. ஸ்பொலேட்டோசாரலில் இயற்கையை ரசித்தபடி இறைவனின் மகிமையை சிந்தித்தபடி நடப்பது வழக்கம். ஒருநாள் அவ்விதம் நடந்துபோகும்போது வழியில் ஒரு பறவைக் கூட்டம் கீச்சீச் என ஒலியெழுப்பி தரையில் வருவதும் எழுவதுமாக இருந்ததை பிரான்சிஸ் கண்டார். உடனே அவைகளிடம் ஓடிப்போய், குனிந்து பேச ஆரம்பித்தார். "பறவைகளே, என் சகோதரிகளே! உங்கள் கீச்கீச் ஒலி எழுப்பி பரமனைப் புகழுங்கள். உங்களுக்கு சுலபமாக உணவு கொடுக்கிறாரே கடவுள். நீங்கள் விதைக்காமலே அறுக்காமலே உணவு உண்ணக் கொடுக்கும் அவரைப் புகழ்ந்துபாடுங்கள்" என்று பேசினார். பறவைகளும் பதில் கொடுத்து மறுபடி பேசின. பதில் ஒலி எழுப்பின. அருகிலிருந்த சகோதரர்களுக்கு கீச்கீச் ஒலி மட்டும் கேட்டது. பிரான்சிசுக்கு பறவைகள் பேசும் மொழிதெரிகிறது என ஆச்சரியப்பட்டனர். அல்வியானோ என்ற

ஊரில் வேடன் ஒருவர் சில அழகிய பறவைகளைக் கூட்டில் அடைத்து அவைகளுக்கு உணவு கொடுக்காமல் வைத்து இருந்ததைக் கண்டு அவற்றை விலைக்கு வாங்கி பறக்கவிட்டார்.

இன்னொரு நாள் அல்வியானோ என்ற கிராமத்திலே பிரான்சிஸ் ஒரு திறந்தவெளியில் மறையுரை நிகழ்த்த ஆரம்பித்தபோது சிட்டுக்குருவி கூட்டம் ஒன்று அதே இடத்தில் மரத்தின்மீது அமர்ந்து ஒரே சத்தம் போட்டு அமர்க்களம் செய்தது. பிரான்சிஸ் மறை உரையை மக்கள் கேட்க தடையாயிருந்தது. உடனே பிரான்சிஸ், சிட்டுக் குருவிகளிடம் “சிட்டுக் குருவி தங்கைகளே, போதுமான அளவு நீங்கள் கூட்டமாய் பேசிவிட்டீர்கள். நல்லது. இப்போது நான் மட்டும் பேசப் போகிறேன்; கொஞ்சம் பேசாதிருங்கள்!” என்று அசிசியார் கூற அதைக்கேட்டு சிட்டுகளும் அவற்றின் குஞ்சுகளும் அமைதியாயின. அதைக் கண்டு அவ்வூர் மக்களே ஆச்சரியப்பட்டனர். குருவிகளின் மொழி இவருக்குத் தெரிகிறது என்றனர். மக்களும் மறையுரையைக் கேட்டதுடன் இயற்கையும் இவருக்குக் கீழ்ப்படிவதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

காட்டருகிலிருந்த குபியோ என்ற ஊரிலிருந்து மக்களை பயமுறுத்தி வந்த ஓநாயை செம்மறிபோல பிரான்சிஸ் மாற்றியதையும் அவ்வூர் மக்கள் கண்டு வாயடைத்து நின்றதை நாம் படித்தோமல்லவா?

கிரேச்சியோ என்ற ஊரின் இயற்கையெழிலில் ஆடு, மாடு, கழுதைகளைக் கண்ட அசிசியார் அங்கு இயற்கையெழிலுடன் புதிய முறையில் கிறிஸ்மஸ் கொண்டாட சிறந்த இடமென எண்ணினார்.

மரியன்னையும் யோசேப்பும் இரவு தங்க இடம் கிடைக்காமல் இங்கும் அங்கும் அலைகழிக்கப்பட்ட போது, எத்தகைய மனவேதனையை அனுபவித்திருப்பார்கள். நிறை கர்ப்பணி மரியாவின் கடின நிலையை எண்ணினார் பிரான்சிஸ். இயேசு ஆண்டவர் உலகத்தவரால் இப்படிப் புறக்கணிக்கப்பட்டுள்ளாரே என பிரான்சிஸ் எண்ணி கண்ணீர் விடுவதுண்டு என சகோதரர்கள் குறிப்பிடுகின்றனர். ஏழ்மையில் பிறந்து, ஏழ்மையில் வாழ்ந்து சொல்லொண்ணா பாடுகள் பட்டு மரித்த இயேசுவை நாம் மகிமைப்படுத்த அவரது எளிய பிறப்பிலும், கொடிய மரணத்திலும் பங்குபெற்று பெருமைப்படுத்தலாமே என எண்ணினார்.

தம்பி தங்கைகளே! கிறிஸ்து இயேசு இவ்வுலகில் மனிதக் குழந்தையாகப் பிறந்ததை, அவர் பிறந்த ஆயிரத்து இருநூற்று இருபத்து மூன்று வருடங்களாக எந்த நாட்டிலும் பொருளுள்ள விதத்தில் கொண்டாட வில்லை. உலகத்தையும் வானத்தையும் படைத்த இறைவன் எளிய குழந்தையாக - ஏழைக்குடும்பத்தில், அதுவும் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தது பற்றி யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் என்று சொல்லி, விருந்து சாப்பிட்டு, ஆடிப்பாடி களியாட்டத்தில் கழித்ததாகத் தெரிகிறது. தங்கள் வீட்டருகில் வாழ்ந்த ஏழை எளிய மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. கிறிஸ்மசுக்கு ஏழைகளும் நல்ல சாப்பாடு சாப்பிட வேண்டும் என நினைக்கவில்லை.

ஏழைப்பெண் மரியா தன் குழந்தை இயேசுவைப் பெற்றெடுத்து, துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார் (லூக் 2:7) என்று நற்செய்தி கூறுகிறது.

அவர் அரச மாளிகையில் பிறக்கவில்லை; போர்த்த பட்டாடை கிடையாது. படுக்க வைக்க பஞ்சணை இல்லை. அருகில் பெரிய பணக்கார மக்களைக் காணவில்லை. ஏழை இடையர்கள் வந்து பார்த்தார்கள். பிறந்திருப்பது உலக அதிபதி; உலக மீட்பர் என்று அங்கு தொழுவத்தில் இருந்த மாடுகளும், கழுதைகளும் அறிந்திருந்தன என்கிறார் பிரான்சிஸ். பிறந்த குழந்தையின் குளிரைப் போக்க அங்கிருந்த எருதுகளும், கழுதைகளும் கதகதப்பான தம் மூச்சைவிட்டு குளிர்போக்கின என்கிறார்.

### பறவைகள் - ஆடுமாடு - கிறிஸ்மஸ்

சகோதர சகோதரிகளான ஆடு, மாடு, கழுதைகளுக்கும், குருவி மற்ற பறவைகளுக்கும் நல்ல உணவு - புல், வைக்கோல், தானியங்கள் பழங்களை கிறிஸ்மஸ் அன்று ஏராளமாக அளிக்க வேண்டும் என்கிறார் பிரான்சிஸ். பழங்களையும் தானியங்களையும் கிறிஸ்து பிறப்பன்று தெருக்களிலும் வழிகளிலும் இறைத்து வைப்பதும் நல்லது என்றார்.

### முதல் கிறிஸ்மஸ் குடில்

கி.பி. 1223-ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் கிரேச்சியோ என்ற ஊரில் மலைச்சாரலில் புது விதத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட திட்டமிட்டார் பிரான்சிஸ். வெல்லித்தா ஜான் என்ற தன் நண்பருக்கு ஊருக்கு வெளியே மலைச்சாரலில் சொந்தமான ஒரு நிலம் இருந்தது. அழகிய சூழலில் அவ்விடம் அமைந்திருந்தது. அவ்விடத்தை பிரான்சிஸ் கேட்டு வாங்கினார். நண்பர் துணையுடனே ஆங்கொரு மாட்டுத் தொழுவத்தை செயற்கையாக இயற்கை அழகு தவழ அமைத்தார்.

மாட்டுத் தொழுவத்தில் முன்னிட்டி ஒன்றை அமைத்தார். அதில் எருது - கழுதைகள் தின்னுவதற்கான வைக்கோலையும் வைத்து நிரப்பினார். முன்னிட்டி இருபுறமும் ஓர் எருது மாட்டையும் ஒரு கழுதையையும் நிற்க வைத்தார். அழகிய குழந்தை இயேசு சுரூபமும் வைத்தார். மாலை வேளையில் - பறவைகள் ஆர்ப்பரித்து பாடின. சூரியன் மறைய - தீவட்டியுடனும் தீப்பந்தங்களை ஏந்தியும், கிரேச்சியோ ஊர் மக்களும், அதை அடுத்து மலையடிவாரத்தில் வசித்த மக்களும் மற்றும் அசிசிநகர் பிரான்சிஸ்கன் துறவிகளும், வளைந்து செல்லும் மலைப்பாதையில் நடந்து மாட்டுத் தொழுவம் அமைக்கப்பட்ட இடத்தை அடைந்தது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. துறவிகள் கைகளில் எரியும் திரிகளுடன் கிறிஸ்துப் பிறப்புப் பாடல்களை இசைத்த வண்ணம் அருகிலமைக்கப்பட்டிருந்த திருப்பலி பீடத்தை அடைந்தனர். அங்கு திருப்பலி நிறைவேற்றிய குரு, திருப்பலியுடன் கிறிஸ்மஸ் கொண்டாடியது மிக பொருளுள்ள கிறிஸ்மஸ் கொண்டாட்டமாக இருந்ததை அந்த குரு

மனநிறைவுடன் கூறினார். நமது சகோதரர் பிரான்சிஸ் - திருத்தொண்டருக்குரிய திருப்பலி உடையான டால்மாட்டிஸ் (Dalmatis) உடை தரித்து பூசை உதவி செய்தார். திருத்தொண்டர் என்ற முறையில் அவர் நற்செய்தியை பெருமகிழ்ச்சியுடன் பாடி அறிவித்தார். அவரே மறையுரையும் ஆற்றினார். 12 - ஆம் நூற்றாண்டுக்கு முன்பு பெத்லகேம் மலைக் குகையில் பிறந்த வறிய அரசனைப் பற்றி கூறி, அவரை பெத்லகேம் குழந்தை இயேசு என்று அழைத்தார். இயேசு என்ற பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் அதன் இனிமையைச் சுவைத்தார். இயற்கை அதிர்ந்தது.

பிற்காலத்தில் கிரேச்சியோ மலையில் இறைவனின் வல்லமை இருந்ததை மக்கள் கண்டார்கள். எத்தனையோ நோயாளிகள் இந்த இடத்தில் வந்து குணமடைந்தார்கள். கால்நடைகளும் இத் தொழுவத்திலிருந்து தானியக் கதிர்களைத் தின்று நோய் நீங்கி குணமடைந்தன. முன்னிட்டியில் கிடத்தப்பட்டிருந்த குழந்தை இயேசு சுரூபம், மிக அழகிய உயிருள்ள குழந்தை போலவே காட்சியளித்தது. இந்நிகழ்ச்சி, கிரேச்சியோ ஊர் மக்களிடத்தில் உறங்கிக் கிடந்த இறை நம்பிக்கையை ஒளிபெறச் செய்தது. உலகில் கிறிஸ்துமஸ் விழாவை பொருளுள்ள விதத்தில் கொண்டாட இது முன்மாதிரியாக அமைந்தது. முதல் கிறிஸ்மஸ் குடில் அமைத்த பெருமை பிரான்சிசுக்கே உரியது.

நாம் நம் நாட்டில் மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதுபோல கிறிஸ்மஸ் அன்று ஆடு, மாடு, கழுதை முதலிய பிராணிகளுக்கும் கிறிஸ்மஸ் விழாவாக கொண்டாடலாமே. திருக்காட்சி திருவிழா - பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. சில ஊர்களில். அதுவும் பொருத்தமே.

**முதல் ஐந்து காய வரம்**

பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் இயேசு குழந்தை, பனிசாரலிலும் குளிரிலும் நடுங்கி துன்பப்பட்டார் என எண்ணி எண்ணி நெஞ்சுருகுவது பிரான்சிசின் வழக்கம். தங்குவதற்கு யோசேப்பும், கர்ப்பிணி மரியாவும் பெத்லகேமில் அலைந்தபோது அவர்கள் அனுபவித்த வருத்தம் மன உளைச்சல், அவமரியாதை சொற்கள் ஆகியவற்றை பிரான்சிஸ் சிந்தித்து மனம் கசிய அழுததுண்டு. குழந்தை பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்யப்பட்டபோது, இயேசு சிந்திய ஒரு துளி இரத்தம், அவரது பாடுகளின் இரத்தத்திற்கு முன் அறிகுறியோ என எண்ணி மனம் துணுக்குற்றார் பிரான்சிஸ்.

தமது 45-ஆவது வயதில் உடல் வலுவற்றிருப்பதை பிரான்சிஸ் உணர்ந்தார். இவருடைய சீடர்களான எளிய சகோதரர்கள் பலவிதங்களிலும் உதவி செய்ய முனைந்தனர். இவருடைய சபையில் சேர்ந்த குருவானவராகிய (அருள்பணி) சகோதரர் லியோ என்பவர் ஆன்ம குருவாக இருந்து உதவினார். குருவானவராக லியோ இருந்தபோதிலும்

சபை ஒழுங்குபடி எளிய சகோதரர் என்றே அழைக்கப்பட்டார். தன் தலைவர் பிரான்சிசும் எளிய சகோதரர் நிலையிலேயே இருந்தார். தான் ஒரு குருவானவராக திருநிலைப்படுத்தப்பட பிரான்சிஸ் விரும்பவில்லை. குருவானவரான சகோதரர் லியோ தன் தலைவர் பிரான்சிசுக்கு எல்லா விதத்திலும் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்தார்.

**உபவாசம்**

பிரான்சிசுக்கு உடல் பலம் குறைவதை உணர்ந்து ஏதோ ஒரு சிறப்புக்கு தன்னை கடவுள் தயாரிப்பதாக உணர்ந்தார். கி.பி. 1224-ஆம் வருடம் மரியன்னை விண்ணேற்பு நாளிலிருந்து (ஆக 15) மிக்கேல் அதிதூதர் திருவிழா (செப். 29) வரை 40 நாளைக்கு உபவாசத்தைத் தொடங்கினார். தன் சபை சகோதரர்கள் யாரும் தன்னுடனிருக்க வேண்டாம் எனப் பணித்தார். தன் ஆன்ம குருவாயிருந்த சகோதரர் லியோவும் அருகிலிருக்க விட விரும்பவில்லை. தனிமையில் செபத்திலும் தியானத்திலும் தீவிரமாய் ஈடுபட்டார் பிரான்சிஸ். அவர் உடல் மேலும் மெலிந்தது. உடலில் முழுவதும் ஒரு வித பெரிய நோக்காடு வலியை அவர் உணர்வதை வெளிப்படுத்தினார். உடல் வலி தாங்க முடியாதவராக ஒருவித சத்தம் எழுப்பினார். செப்டம்பர் 14-ஆம் நாள், திருச்சிலுவை உயர்த்தப்படும் திருவிழாவிற்கு முந்தின நாள், அதிகாலையில் பிரான்சிஸ் முழந்தாட்படியிட்டு செபிக்கலானார். “இயேசுவே இறைவா! நான் இறக்குமுன்பு, உம்மிடம் இரு வரங்களைக் கேட்கிறேன். ஒன்று, உமது பாடுகளின் அகோர வேதனையை என் சக்திக்கு இயன்றளவு நான் என்னில் அனுபவிக்க வேண்டுகிறேன். அடுத்து, எங்களுக்காக உம்மையே பலியாக்கிய அந்த அன்பை நானும் கொண்டிருக்க வேண்டும்” என்று வேண்டினார்.

இப்படியாக செபித்துக் கொண்டிருந்த வேளையில் வானத்திலிருந்து நெருப்புமயமான ஆள் சம்மனசு போல இறங்கி வந்தார். அவருக்கு ஆறு இறக்கைகள் இருந்தன. அவர் சிலுவையில் அறையப்பட்ட ஓர் ஆள் போல தோற்றமுடையவராக இருந்தார். இரு நெருப்பு இறக்கைகளால் அந்த ஆள் தன் முகத்தை மூடியவாறும், வேறு இரு இறக்கைகளால் தன் உடலை மறைத்தவாறும், மற்ற இரண்டு இறக்கைகளால் பிரான்சின் முன்பு பறந்தவாறும் ஆகாயத்தில் இருந்தார். திடீரென அந்த ஆள் தன் பார்வையை பிரான்சிஸ் மேல் பதித்தார். அதே கணத்தில் அவருடைய ஆறு இறக்கைகளிலிருந்தும் நெருப்புச்சுவாலை வேகமாகப் புறப்பட்டு வந்து பிரான்சிசுடைய இரு கைகள், இரு கால்கள், வலது விலா மற்றும் தலையைத் துளைத்து வெளியேறின. இயேசு நாதர்தான் தமது திருப்பாடுகளின் காயங்களை இவ்வாறு பிரான்சிசுடைய உடலில் பதித்துவிட்டு மறைந்துள்ளார்.

ஆன்ம குருவாகவும், மருத்துவ தாதியாகவும் அருகில் இருந்த குரு லியோ, பிரான்சிசுடைய காயங்களிலிருந்து அப்போது வடிந்த இரத்தத்தைத் துடைக்க வேண்டியதாயிற்று; ஏனெனில் பிரான்சிஸ்

அணிந்திருந்த சட்டை இரத்தத்தால் நனைந்தது. இவ்விதமாக பிற்காலத்திலும் வெள்ளிக் கிழமைகளில் மட்டும் இரத்தம் கசியலாயிற்று.

பிரான்சிஸ் தன் காயத்தை யாருக்கும் தெரிவிக்காமலும் காட்டாமலும் வைத்திருக்க நினைத்தார். ஆனால் எளிய சகோதரர்கள் அதை வெளிப் படுத்தி கடவுளை மகிமைப்படுத்த வேண்டியதாயிற்று. "எளிய சகோதரனுக்கு மகிமையின் காயங்கள்" "போர்க்குறி காயங்களல்ல; வேதனையின் காயங்கள்".

இப்போது மேலும் சிலர் இயேசுவின் ஐந்து காய வரம் பெற்றுள்ளனர். புனித பியோ மற்றும் பலர். ஐந்து காய வரம் பெற்றுள்ளனர் என்பதை நாம் அறிவோம். இயேசுவின் பாடுகளில் நேரிடையாகப் பங்கேற்பது பெரிய பேறுதான்.

### தவக்காலத்தில் மட்டுமா?

அன்பார்ந்த தம்பி தங்கைகளே! நமது தாய் திரு அவையின் திருவழிபாட்டு கால சக்கரத்தில் மூன்று பெரிய வட்டங்களைக் காண்கிறோம். அவை: கிறிஸ்மஸ் காலவட்டம்; பொதுக்கால வட்டம்; உயிர்ப்புப் பெருவிழா காலவட்டம்.

கிறிஸ்மஸ் கால வட்டம் திருவருகைக் காலம், கிறிஸ்மஸ் பெருவிழா, அதை அடுத்து திருக்காட்சி திருவிழா என வருகிறது. கிறிஸ்மஸ் எனும் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை பொருள் உள்ள விதத்தில் கொண்டாட பிரான்சிஸ் ஏற்பாடு செய்தார்.

பொதுக் கால வட்டத்தில் சுமார் 34 வாரங்கள் வரும். அதுபோது திருவிவிலியத்தில் வரும் இறைவார்த்தைப் பகுதிகளை வாசிக்கிறோம், கேட்கிறோம். பழைய ஏற்பாட்டின் 46 நூல்களிலும் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களிலும் உள்ள நமது மீட்பு வரலாற்று நிகழ்வுகள் கோவையாகத் தரப்படுகிறது. பிரான்சிஸ் இறைவார்த்தைகளை கவனமுடன் வாசித்து அதன்படி தன் வாழ்வை அமைத்துக்கொண்டதை கண்டோம்.

உயிர்ப்புப் பெருவிழா காலவட்டத்தின் தொடக்கத்தில் தவக் காலம் ஏழு (7) வாரங்களை நாம் கடைபிடிக்கிறோம். அதுசமயம் இயேசு ஆண்டவரின் திருப்பாடுகளை தியானிக்கிறோம். அந்நாள்களில் ஒறுத்தல் உபவாசம் செப தவமுயற்சிகளை மேற்கொள்ளுகிறோம். பிரான்சிசுக்கு இயேசுவின் பாடுகள் எப்போதுமே அவர் கண்முன் நின்றன. அதனால் இயேசுவின் ஐந்து காயங்களைத் தன் உடலில் பெறும் பேறு பெற்றார். நமது சிந்தனைக்கும் இது உரியது. சிந்திப்போம்.

தம்பி தங்கைகளே! முதல் ஐந்து காய வரம் பெற்ற பிரான்சிசின் வரத்தினால் பிரான்சிஸ்கன் சபை என சில சபைகள் தோன்றின. அச்சபைகள் வளரலாயின. அவைகளில் ஒரு சிறப்பு உள்ளது. அது யாது என நாளை பார்ப்போம்.

# ஏழாம் நாள்

### பிரான்சிஸ்கன் சபை: வளர்ச்சியும் சிறப்பும்

பிரான்சிஸ் தற்காலத்துக்கும் பொருத்தமானவர்; எக்காலத்துக்குமே பொருத்தமானவர். அவர் கற்பித்த வாழ்க்கை முறை கொள்கைகள் ஆன்மீகம் யாவும் எளியவை, எல்லாவித மக்களாலும் ஏற்கத்தக்கவை. இவரது மறையுரையைக் கேட்டவர்கள் யாவரும் தங்கள் மீட்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உலகத்தையே துறந்துவிட ஆர்வம் கொண்டனர். புதிதாகச் சேரவரும் இளந்துறவிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. "சிறிய சகோதரர்" என அழைக்கபட சபையில் சேர அருள்பொழிவு பெற்ற குருக்கள் கூட ஆசித்தனர், பெருமைபட்டனர். இவர் காலத்திலேயே மூன்று சபைகளாக பரிணமித்தன.

### பிரான்சிஸ்கன் முதலாம் சபை

1209-ல் எல்லாவற்றையும் துறந்து பிச்சைச்சாரத் துறவியாக பிரான்சிஸ் வாழ்ந்ததைத் கண்ட மக்கள் பலர் அசிசி நகரிலும் மற்ற இடங்களிலும் கூட அவரிடம் வந்து சேர்ந்து அவரைப் போல வாழ விரும்பினர். 1221-ல் மூவாயிரம் துறவிகளைக் கொண்ட பிரான்சிஸ்கன் முதலாம் சபையாக வளர்ந்துவிட்டது. இதனை ஆண் துறவிகளுக்கான சபையாக உருவாக்கினார். இதில் "சிறிய சகோதரர்" என்ற பெயரிலேயே குருக்களும், அருள்பொழிவு பெறாத துறவிகளும் மகிழ்ச்சியாக, பெருமை உணர்வுடன் செயல்பட்டது பாராட்டத்தக்கது.

### பிரான்சிஸ்கன் இரண்டாம் சபை

பிரான்சிசின் எளிய வாழ்க்கை முறை அவரைப் பின்பற்ற ஆண்களைத் தூண்டியது மட்டுமல்ல, பெண்களையும் தூண்டியது. அவருடைய மறையுரை பலர் மனதைக் கொள்ளைக் கொண்டது. கிளாரா என்ற இளம் பெண் பிரான்சிஸ் போலவே வாழத் துணிந்து அவரிடம் வந்து தன்னையும் அவருடைய முதலாம் சபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டார். கிளாராவின் பெற்றோர் இதை விரும்பவில்லை. கிளாராவின் துணிவும், கடவுள் பக்தியும் பிரான்சிசுக்கு மனதில் தாக்கத்தை உண்டாக்கின. எனவே 1212-ஆம் ஆண்டு மார்ச் 18-ஆம் நாள், கிளாராவுக்கு சபையின் புதிய ஒழுங்குகளைக் கொடுத்து பெண்களுக்கான பிரான்சிஸ்கன் இரண்டாம் சபையை ஏற்படுத்தினார். கிளாராவின் சகோதரி ஆக்னேஸ் என்ற இளம் பெண்ணும் இந்த சபையில் சேர்ந்தார். நாளாவட்டத்தில் இரண்டாம் சபையும் ஆள்போல் விழுதுவிட்டு வளர்ந்தது.

### 3-ஆம் சபையின் சிறப்பு

பிரான்சிஸ் காலத்தில் மேலோங்கி இருந்த ஆன்மீகம் "மடத்து ஆன்மீகம்" எனலாம். அது உலகம் தீயது என்ற மெய்யியல் அடிப்படையில், உலகத்தைவிட்டு காட்டிற்கு ஓடிப்போனால்தான் மீட்படைய முடியும் என்று எண்ணினர் சிலர். அந்த அடிப்படையில் தான் புனித வனத்து அந்தோணியார், புனித வனத்து சின்னப்பர் போன்றோர் காட்டில் போய் தவ வாழ்வு தனிமையில் மேற்கொண்டனர். இன்னும் சற்று பிற்பட்ட காலத்தில் சிலர் குழுவாக ஒன்று சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். இதனால் உலகத்துக்கு, உலகில் வாழும் பிற மக்களுக்கு என்ன பயன் என்ற வினா எழலாயிற்று. பிரான்சிசின் சபையினர் மடத்துத் சூழலில் மட்டும் வாழவேண்டும் என பிரான்சிஸ் கருதவில்லை. பொது நிலையினரும் ஆன்மீக வாழ்வு, புனித வாழ்வு வாழ வேண்டும் என புது புரட்சி கருத்தைக் கூறியது பிரான்சிசின் சிறப்பு ஆகும்.

இந்த மூன்றாம் சபையினரில் அரசன், ஆண்டி, படித்தவன், பாமரன், முதியோர், இளையோர், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடில்லாமல் இருந்தது. இச்சபையிலிருந்து ஐம்பத்து மூன்று பேர் புனிதர்களாக உயர்த்தப்பட்டுள்ளது 3-ஆம் சபையின் மற்றும் ஒரு சிறப்பும், உலகத்துக்கு வழிகாட்டியுமாகும்.

### பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை

பிரான்சிசைப் போல எல்லாவற்றையும் துறந்த அவரையே முழுக்க முழுக்கப் பின்பற்ற பல இல்லறத்தவர் முற்பட்டனர். 1209-ஆம் ஆண்டு பல பொதுநிலையினர் - கணவனும் மனைவியுமாக, தங்கள் குடும்ப வாழ்விலிருந்து கொண்டு துறவிகளைப் போல வாழ விருப்பம் தெரிவித்தனர். சில விதவைகளும் பிரான்சிசின் ஆலோசனைப்படி புதுவகை வாழ்வு வாழ்ந்தனர். 1226-ல் இத்தகைய குடும்பத் துறவிகளுக்கு சில ஒழுங்கு முறைகளை எழுதித் தந்தார்.

### மூன்றாம் சபை ஒழுங்குகள்

பொதுநிலையினரும் ஆன்மிக வாழ்வு - புனித வாழ்வுக்கு அழைக்கப்பட்டனர். மூன்றாம் சபை சகோதர சகோதரிகள், அடக்க ஒடுக்கமான உடை அணிந்து கொள்ள வேண்டும். தோலால் ஆன கைப்பையும், இடைக்கச்சையும் அணியவேண்டும். வாரத்தில் நான்கு நாள்கள் புலால் உணவை தவிர்க்க வேண்டும். தினமும் 54 "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்ற செபத்தை செபிக்க வேண்டும். ஆண்டில் மும்முறையாவது ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்று நற்கருணை உட்கொள்ளவேண்டும். நோயாளரைச் சந்தித்து ஆறுதல் கூறவேண்டும். தங்கள் சபையோரின் மரணச் சடங்குகளில் ஒன்றுகூடி செபிக்க வேண்டும். இவற்றை சத்தியவாக்காக ஒரு தலைவரிடம் அளிக்கவேண்டும். தலைவரை தங்களுக்குள்

தேர்ந்துகொள்வர். இவை பிற்காலத்தில் திருஅவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கடின வியாதியுற்றிருந்த பிரான்சிசை இந்த மூன்றாம் சபையின் சகோதரி யக்கொபா என்பவர் சந்திக்க வந்தார். மறுநாள் அவர் தன் ஊருக்குப் புறப்பட்டபோது, இரண்டு நாள்களில் இறக்கப் போவதை உணர்ந்தவராக பிரான்சிஸ் யக்கொபாவை இரண்டு நாளுக்கு அப்புறம் புறப்பட்டுப் போகச் சொன்னார். இந்தச் சபையில் அரசர்களும், விவசாயிகளும் சேர்ந்திருந்தனர். இவர்கள் தங்களுக்குள் கலந்துபேசி நல்ல ஒரு சுமூகமான வாழ்க்கை நடத்தலாயினர். பிரச்சினைகளுக்காக நீதி மன்றங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையில்லாது போயிற்று. மூன்றாம் சபையிலிருந்து புனிதராக நூற்றுக்கணக்கானோர் உயர்த்தப் பட்டுள்ளனர். புனித லுக்கேரியா குறிப்பிடத்தக்க 3ஆம் சபை புனிதர்.

பிரான்சிஸ் சமூக சீர்திருத்தம் செய்த புனிதர் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் இக்காலத்துக்கும் உரியவர் என்பது உண்மையிலும் உண்மை.

### போர்சியுங்குலாவும் – 3 சபைகளும்

பிரான்சிசுக்கு ஆண்டவர் இயேசு சன் தமியானோ ஆலயத்தில் பாடுபட்ட சிலுவையிலிருந்து பேசி, “பிரான்சிஸ், நீ போய் பாழடைந்து போகும் என் இல்லத்தை பழுதுபார்” என்று கூறியதை சிரமேற்கொண்டு மூன்று ஆலயங்களைப் பழுதுபார்த்து சீர் செய்ததை அறிவோம்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின்புதான், இயேசு குறிப்பிட்ட இல்லம் ஆலயம் - உலகத் திரு அவை என்பதை உணரலானார். அது போர்சியுங்குலா என்ற சிற்றாலயத்தில் நிகழ்ந்தது. 1208-ஆம் ஆண்டு புனித மத்தியாஸ் திருவிழா அன்று போர்சியுங்குலா ஆலயத்தில் பிரான்சிஸ் திருப்பலியில் பங்கேற்றார். அன்று வாசிக்கப்பட்ட நற்செய்தி வாசகம் இவருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

“நீங்கள் சென்று விண்ணரசு நெருங்கிவிட்டதென்று அறிவியுங்கள். . . பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள் மடியில் வைத்துக் கொள்ள வேண்டாம். . . வீட்டுக்குள் போகும்போது, “உங்களுக்குச் சமாதானம்” என்று வாழ்த்துங்கள்” (மத் 10:7-12) என்ற வசனம் பிரான்சிசைத் தொட்டது. அன்று முதல் பிரான்சிஸ் புதுமுறையில் நற்செய்தி அறிவிக்கலானார்.

மக்கள் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் செய்ய வேண்டும் என்று அன்றுமுதல் போதிக்கலானார். மக்கள் அவருடைய மறை உரைகளால் கவரப்பட்டனர். பாவிகளுக்கு ஈடேற்றம், மன அமைதி குலைந்தவர்களுக்கு மன சாந்தியும், மகிழ்ச்சியும் பெறும் இரகசியத்தை போதிக்கிற புனிதராக பிரான்சிசை மதித்தனர். அதேபோல போதிக்க, தன் சகோதரர்களுக்கும் பயிற்சியளித்து அனுப்பலானார்.

## போர்சியுங்குலா - பலன்

பிரான்சிஸ் தான் ஞான உதயம் பெற்ற போர்சியுங்குலா கோவிலை மக்கள் எல்லாரும் எளிதில் தரிசித்து பரிபூரண பலன் அடைய திருத்தந்தை 3-ஆம் இன்னோசென்டிடம் கேட்டார். அவர் அதைத்தர சிலுவைப் போர் அல்லது எருசலேம் கோவில் சந்திப்பைக் குறிப்பிட விரும்பினார். ஆனால் அவர் இதற்கிடையே இறந்துபட, அடுத்து வந்த திருத்தந்தை 3-ஆம் ஒணோரியுஸ் அவர்களிடம் பிரான்சிஸ் கேட்டார்.

திருத்தந்தை ஒணோரியுஸ் பிரான்சிசிடம், எத்தனை வருட பரிபூரண பலனை எதிர்பார்க்கிறீர்? என்று கேட்டார். மூன்று வருட பலன் தர கேட்கிறீரா? என்று கேட்டார்.

பிரான்சிஸ் கேட்டது: "தந்தையே! ஒப்புரவு அருளடை யாளத்தைப் பெற்று பாவ மன்னிப்புப் பெற்று, இந்த போர்சியுங்குலா ஆலயத்தில் நுழைபவர்கள் எல்லாருக்கும், அவர்களுடைய எல்லா பாவங்களும், பாவக் கடன்களும் மன்னிக்கப்பட வேண்டும்" என்று பணிந்து கேட்டார்.

திருத்தந்தையோ, "இதை உரோமை கியூரியாவைக் கேட்க வேண்டியிருக்குமே," எனக்கூற, கடவுளே தன்னை திருத்தந்தையிடம் இதைக் கேட்கச் சொன்னதாகக்கூறி போர்சியுங்குலா பரிபூரண பலனை பிரான்சிஸ் பெற்றுத் தந்தார்.

## இறை இரக்க ஆண்டின் இறை இரக்கம் தொடர்கிறது

இறை இரக்க யூபிலி ஆண்டில், திருத்தந்தை பிரான்சிஸ் உரோமை கோவில் கதவைத் திறந்து வைத்து யூபிலி ஆண்டினை அறிவித்தாரல்லவா? அதை மூடி யூபிலி ஆண்டினை முடித்தும் வைத்தபோது, இறை இரக்கம் முடிவதில்லை என்பதை, "இரக்கமும் இழிநிலையும்" என்ற திருத்தூது மடலில் தெளிவாக்கினார். திருத்தந்தை மட்டுமே சில பெரிய சாவான பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உடையவர். "உரோமை ஒப்புரவாயம்" (Penitentiary) வழியே திருத்தந்தை சில பாவங்களுக்கு மன்னிப்பு வழங்குவார். அத்தகைய சலுகையை இவ்வாண்டில் (2017) உலக மக்களுக்கு வழங்க திருத்தந்தை குருக்களுக்கு அதிகாரத்தை பொதுவில் வழங்கியுள்ளார். அசிசி பிரான்சிஸ் திருத்தந்தை பிரான்சிசுக்கு முன்னோடி என்னலாம். அசிசி பிரான்சிஸ் இக்காலத்துக்குரியவர்.

போர்சியுங்குலா கோவிலை மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள ஒருசில கோவில்களை சந்தித்தும் பரிபூரணபலன் பெற நமது திருத்தந்தை பிரான்சிஸ் சலுகை வழங்கியுள்ளார். அசிசி பிரான்சிஸ் வாழ்க! திருத்தந்தை பிரான்சிஸ் வாழ்க!

தம்பி தங்காய் போர்சியுங்குலா பலனை மூன்று சபையினரும் அடையலாம். நீயும் நானும் அடையலாம். முதலில் ஒப்புரவு அருளடையாளம் பெற வேண்டும். பிரான்சிசின் வாழ்க்கை முடிவு பற்றி தெரிந்து கெள்ளவேண்டுமல்லவா? நாளைக்கு வாருங்கள்!

# எட்டாம் நாள்

## பிரான்சிசின் மரணம்

### சகோதரர்களுக்கு இறுதி அறிவுரை

பிரான்சிஸ் தனது இறுதி நாள்கள் நெருங்குவரை உணரலானார். தான் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து முடித்துவிட்ட மன நிறைவுடன் தன் சாவுக்கு தயாரானார். சபையை நடத்த வேண்டிய தலைமை சகோதரர் எப்படி இருக்க வேண்டும் என தன் விருப்பத்தை எடுத்துக்கூறி தன் அன்பைக் காட்டினார்.

தலைமைச் சகோதரர் - சகோதரி - தவத்தை நேசிப்பவராக, இறை பக்தி உள்ளவராக, பிறர் மட்டில் அனுதாபம் காட்டுபவராக, கூர்ந்த அறிவுடைவராக இருத்தல் வேண்டும். பாரபட்சம் காட்டாமல் அனைவரையும் நேசிக்க வேண்டும். செபம் செய்பவராக, அதிகாலையில் எழுந்து திருப்பலியுடன் நாளை அர்ச்சித்து, தனக்காகவும் தன் சகோதரர்களுக்காகவும் நெடுநேரம் செபிப்பவராக இருத்தல் வேண்டும். தன்னைத் தேடி வருபவர்களுக்கு மகிழ்ச்சியுடன் பதிலளிக்க வேண்டும். தனது கல்வியினால் அகங்காரம் கொள்ளக்கூடாது. எளிமையுடனும் தாழ்ச்சியுடனும் நடந்துகொள்ள வேண்டும். பணத்தை வெறுக்க வேண்டும். ஒரே உடை ஒழுங்கு புத்தகம்போதும் பிற சகோதரர்கள் தலைமை சகோதரரை மதிக்க வேண்டும். தனிமையில் உண்ணலாகாது. குழுவில் சேர்ந்து உண்ண வேண்டும். ஒருவர் ஒருவருக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரைகள் பொதுநிலையினருக்கும் - 3ஆம் சபையினருக்கும் உரியதான வகையில் பிரான்சிஸ் வழங்கினார்.

### மரணத்துக்கு ஆயத்தம்

பிரான்சிஸ் கைகளினால் வேலை செய்தும் - யாசித்தும் நற்செய்திப் பணி செய்ததால் உடல் மெலிந்தது. சில நாள்களில் கை கால்கள் வீங்க ஆரம்பித்தன.

1226 செப்டம்பர் 15 திருச்சிலுவை மகிமை நாள். பிரான்சிசின் உடல் நிலைபற்றி கேள்விப்பட்டு பலர் அவரை சந்திக்க வந்தனர். சகோதரர்கள் சபை ஒழுங்கை கடைபிடிக்கத் தூண்டினார். போன் ஜியோவான்னி என்ற மருத்துவ நண்பர் பிரான்சிசைப் பார்க்க வந்தார். தன் உடல் கை - கால்கள் வீக்க முற்றிருந்தது பற்றி மருத்துவரிடம் கேட்டார். மருத்துவர், “சகோதரரே, இறைவனின் சித்தப்படி எல்லாம் சுகமாய் முடியும் என நினைக்கிறேன்” என ஆறுதல் மொழி கூறினார். எனினும் பிரான்சிசை மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதை மருத்துவர் உணர்ந்தார்.

பிரான்சிசும் உணர்ந்தார். தலையிலும் கண்களிலும் கொடிய வேதனையை அனுபவித்தார்.

தன் சகோதரர்கள் எளிமையுடனும் தாழ்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேச முற்பட்டார்.

தன் மரண நேரம் நெருங்குவதை உணர்ந்த பிரான்சிஸ், தன் உடல் வேதனைகளைத் தாங்கிக்கொள்ள உதவுமாறு "சகோதரி மரணமே என்னை அணைக்க வா" என்று உணர்ச்சி வசப்பட்டு கூறினார். தன் சகோதரர்களைத் தன் அருகில் அழைத்து தான் இயற்றிய ஆதவனின் கீதத்தைப் பாடக் கேட்டார். இயற்கையை இரசித்து இயற்கை யாவும் - சூரியன் - சந்திரன் - விண்மீன்கள் - செடிகொடிகள் - பறவைகள் - மீன்கள் - மிருகங்கள் யாவுமே மனிதனின் சகோதர சகோதரிகள் என்ற உணர்வுடன் பாடின பாடல் அல்லவா?

இயற்கைக்காகவும், மரணத்யையும் துன்பத்தையும் தந்த-தற்காகவும் இறைவனை வாழ்த்தினார். விண்ணகத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள பயன்படுத்தும் மண்ணகத்திற்காக இறைவனை வாழ்த்தினார். "நான் இறைவனின் மகிமையில் நுழைவேன் என அவரே எனக்கு உறுதி கூறியுள்ளார் எனக் கூறினார். மரணத்தைத் தன் சகோதரி என உளமாறக் கூறினார். பிரான்சிசுக்குக் கண் பார்வை மங்கலாயிற்று. உடல் வீக்கமும் அதிகரித்தது. பிரான்சிசின் விருப்பப்படி அவரை தான் ஞானம் பெற்று - போர்சியுங்குலாபலனை உலகிற்கு வாங்கித்தந்த விண்ணவர்களின் தூய மரியாள் ஆலயமான போர்சியுங்குலா ஆலயத்திற்கு அவரைக் கொண்டு போகத் தீர்மானித்தனர். ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப்படை பின் தொடர்ந்தது. சொந்த ஊர் அசிசி நகரை விட்டு வெளியே வந்ததும் அந்த நகர்மீது சிலுவை அடையாளம் வரைந்தார்.

போர்சியுங்குலா கோவிலின் அருகில் ஒரு குடிசையில் அவரைக் கிடத்தினர். ஆடையின்றி தரையில் தன்னைக் கிடத்தக் கேட்டார். விலாக் காயத்தைக் கையால் மூடி வேதனையை வெளியிட்டார். சகோதரர்கள் ஒவ்வொருவராக அவர் அருகில் சென்று ஆசி பெற்றனர்.

### அமைதியின் தூதனாய்

இது பிரான்சிஸ் அடிக்கடி செய்த செபம் - இறுதி நேரத்திலும் செய்தார்.

இறைவா!

அமைதியின் தூதுவனாய் என்னைப் பயன்படுத்தும்

பகையுள்ள இடத்தில் பாசத்தையும்

மனவேதனை உள்ள இடத்தில் மன்னிப்பையும்

ஐயமுள்ள சூழலில் நம்பிக்கையையும்

அவநம்பிக்கையுள்ள மனத்தில் எதிர்பார்ப்பையும்

இருள் சூழ்ந்த இடத்தில் ஒளியையும்
துயரம் நிறைந்த இடத்தில் ஒளியையும்
துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழ்ச்சியையும்
விதைத்திட எனக்கு அருள்புரியும்.
ஓ தெய்வீக குருவே!!
ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும்
பிறர் என்னைப் புரிந்துகொள்ள விரும்புவதைவிட
பிறரைப் புரிந்து கொள்ளவும்,
பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதைவிட
பிறருக்கு அன்பை அளிக்கவும்
எனக்கு அருள்வீராக!
ஏனெனில்
கொடுக்கும் பொழுது மிகுதியாய்ப் பெறுகிறோம்;
மன்னிக்கும் பொழுது மன்னிப்பை அடைகிறோம்
மரிக்கும்பொழுது நித்திய வாழ்விற்குப் பிறக்கிறோம்.
எனவே
சுயநலமற்ற வாழ்வில் அமைதியை அடைகிறோம். ஆமென்.

பிறகு பிரான்சிஸ் தன் சபை சகோதரர்களை அழைத்து தன் ஆசியை வழங்கினார். 1226-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி அவர் சாவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு அவர் விருப்பப்படி அவரை வெற்றுத் தரையில் கிடத்தி அவர் உடலில் சாம்பலைப் பூசினர். ஆதவனின் கீதம் மீண்டும் ஒலித்துக்கொண்டேயிருந்தது. பிரான்சிஸ் சில ரொட்டித் துண்டுகளைக் கொண்டு வரச்சொல்லி அவற்றை ஆசீர்வதித்து தன் சகோதரர்களுடன் பகிர்ந்து கொண்டார். 1226-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 3-ஆம் தேதி சனிக்கிழமை திருப்பாடல் 141-ஐ பாட ஆரம்பித்தார். “என் ஆண்டவரை நோக்கி, நான் கூக்குரல் எழுப்புகின்றேன்; பெருங்குரல் எழுப்பி நான் அவரை மன்றாடுகிறேன். . . ” சகோதரர்கள் அதைத் தொடர்ந்து பாடினர்.

தனது 46-ஆம் வயதில் பிரான்சிஸ் பாடிக் கொண்டே மரித்தார். அக்டோபர் 4-ஆம் தேதி பிரான்சிசின் உடலை போர்சியுங்குலாவிலிருந்து அசிசிக்குக் கொண்டு செல்லும் ஊர்வலம் தொடங்கியது. பிரான்சிசின் விருப்பப்படி சன்தமியான் ஆலயத்தை பவனி அடைந்தது. அங்கு சகோதரி கிளாராவும் அவரது சகோதரிகளும் தங்களின் தந்தையின் சடலத்திற்கு முத்தி செய்து கண்ணீர் சொரிந்தனர். பிறகு புனித ஜார்ஜ் ஆலயம் சென்று அடக்கம் செய்யப்பட்டது.

1228ஆம் ஆண்டு ஜூலை 16-ஆம் தேதி திருத்தந்தை 9-ஆம் கிரகோரி பிரான்சிசுக்கு புனிதர் பட்டம் தந்தார்.

தம்பி தங்கைககளே! நீங்களும் பிரான்சிஸ்கன் 1ஆம், 2ஆம், 3ஆம் சபைகளில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்கலாம். யோசியுங்கள்.



## ஒன்பதாம் நாள்

பிரான்சிஸ் ஒரு தனித் தன்மையுடையவர். வரலாற்றில் தனி இடம் வகிப்பவர். புரட்சி என்பதெல்லாம் ஒரு தனி மனிதனின் முயற்சிதான். அதற்கு ஒரு சிறந்த சான்று அசிசிநகர் புனித பிரான்சிஸ்.

1986ஆம் ஆண்டு அக்டோபர் 27-ஆம் தேதி அசிசியில் நடைபெற்ற அகில உலக பல்சமய தலைவர்கள் கூட்டத்தில் பேசிய திருத்தந்தை 2ஆம் ஜான் பால், கூறியது பிரான்சிசின் உலகளாவிய பரந்த மனதை எடுத்துக் காட்டுகிறது.

“சமாதானத்துக்கு வழிவகுப்புது, அடக்கத்துடன் இறைவனுக்கு முன்னால் தன்னை செபத்தில் அமைதியில் - மௌனத்தில் ஒடுக்கும் பண்பே” என்று கூறி பிரான்சிசின் குணங்களுக்குப் புகழாரம் சூட்டினார். பிரான்சிஸ் தான் வாழ்ந்த காலத்தில் சமாதானத்தின் தூதுவனாகத் திகழ்ந்தார். உண்மை விடுதலை என்பது, தன்னையே சில தீய குணங்களிலிருந்து விடுவித்துக் கொள்வதாகும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர். கிறிஸ்துவின் விழுப்புண்களைத் தாங்கி நின்ற புனிதர்களில் முதல்வராகத் திகழ்கிறார் அசிசியார்.

ஒரு தடவை தன்னை பேட்டிக்காண வந்த பிரான்சிஸ்கன் சபையினரைப் பார்த்து திருத்தந்தை 23-ஆம் யோவான் கூறியது: “இன்றைய உலகில் மறுபடியும் புனித பிரான்சிஸ் அசிசியார் தோன்ற வேண்டும்.”

12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பிரான்சிஸ் சமயப் புரட்சி செய்தார், சமுதாயப் புரட்சியும் செய்தார். ஏழ்மையைப் பின்பற்றுவதன் வழியாக உலகில் அன்பையும், அமைதியையும் அடைய முடியும் என வாழ்ந்து காட்டிய செயல் புரட்சியாளர்.

செல்வந்தரான இவரின் எளிய வாழ்வு, அவருக்குப் பின் பல மனிதர்களைப் பின்பற்றச் செய்து, புனிதர்களாக்கியது. இன்று பல கிறிஸ்தவ துறவு சபைகள் இவருடைய ஆன்மிக அடிப்படையில் இயங்கி வருகின்றன. இரண்டாயிரம் ஆண்டு திரு அவை வரலாற்றில் முதன் முறையாக இன்றைய நமது 266-ஆவது திருத்தந்தை புனித பிரான்சிஸ் அசிசியின் பெயரைத் தமது சிறப்புப் பெயராக்கிக் கொண்டுள்ளது ஓர் உன்னதமான நிகழ்வு. தான் மட்டும் புனித பிரான்சிஸ் அசிசியாரைப் பின்பற்றி வாழவேண்டும் என்ற ஒரு நோக்கத்திற்காக இப்பெயரை எடுத்துக்கொண்டாரா? அதுவும் உண்மையே! அசிசிநகர் பிரான்சிசைப் போலவே, இன்றைய நம் திருத்தந்தை பிரான்சிஸ், தமது எளிய வாழ்க்கையால் ஒட்டுமொத்த உலக மக்களைக் கவர்ந்து இழுக்கிறார் என்று பேராயர் A.M. சின்னப்பா கூறுகிறார்.

12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புனிதர் இக்காலத்துக்கும் ஏற்றவராக இருக்கிறார் என்பது உண்மை. வன்முறைகளும் வன்ம குணங்களும் ஆபத்தின் அளவைத் தாண்டி வானத்தின் முகட்டை எட்டிப் பார்க்கும் இக்காலத்தை அசிசியாரின் கொள்கைகளான ஏழ்மை, இரக்கம், இயற்கை நேசித்தல், அன்பு, பணிவு, கனிவு, தியாகம், இறைபக்தி என்ற பண்புகளைக் கொண்டுதான் மீட்டெடுக்க முடியும் என்பது உண்மையிலும் உண்மை. அதற்காகவே இன்றைய நமது திருத்தந்தையும் முயற்சிப்பது உலகறிந்த உண்மை.

இயற்கையை வாசி - யோசி - சுவாசி - விசுவாசி - இது அசிசி பிரான்சிசின் தாரக மந்திரமாயிருந்தது. அதன் விளைவாக பிறந்தது “ஆதவன் கீதம்”. திருத்தந்தை பிரான்சிஸ் இன்று நமக்கு வற்புறுத்துவதும் அதுவே. அவர் நமக்குத் தந்தது “புகழ் அனைத்தும் உமதே” - சுற்றுமடல். நாமும் வாசிப்போம் - யோசிப்போம்.

12-ஆம் நூற்றாண்டில், “உலகம் தீயது. அதனை விட்டு காட்டிற்கு ஓடிப்போய் தவ வாழ்வு மேற்கொள்வதே மீட்படைய ஒரே வழி” என்ற மனப்பான்மை மக்களிடையே ஓங்கி இருந்தது. அந்த கால திரு அவையின் போதனையும் அப்படி இருந்தது. எனவேதான் அக்காலத்தில் துறவு மடங்கள் உருவாயின. அசிசி நகர் பிரான்சிசும் புகழ்மிக்க பெனடிக்டினர் துறவு மடத்து வாழ்க்கை முறையை விரும்பவில்லை. திருமணம் செய்து குடும்பத்தில் வாழ்பவருக்கும் ஆன்மிகம் உண்டு - தேவை என்ற புதிய கருத்தை உலகில் புகுத்தினார் பிரான்சிஸ். அதன் அடிப்படையில் பிரான்சிஸ்கன் 3-ஆம் சபை உருவாக்கினார் என்பது வெள்ளிடைமலை. இன்றைய நம் திருத் தந்தையின் “அன்பின் மகிழ்ச்சி” என்ற நூலும் குடும்பத்திலிருப்பவர்களும் புனித வாழ்வு வாழ வழி காட்டியுள்ளது

போற்றற்குரியதாக உள்ளது. யார் யார் எந்த எந்த நிலையில் வாழ்கிறோமோ - அவரவர் அந்த நிலையிலேயே வாழ்ந்து புனிதம் அடைய வேண்டும் என திருத்தந்தை வற்புறுத்துகிறார். இது இன்றைய உலகிற்குத் தேவையான வழிகாட்டலாகும்.

இரக்கமுள்ள இறைவனை ஏற்றிப்போற்ற அசிசி பிரான்சிசு இரக்கமுள்ளவராக வாழ்ந்ததும் வரலாறு. இறை இரக்கத்தை உலகம் கண்டு நன்றி செலுத்தவும் பின்பற்றவும் நம் திருத்தந்தை இறை இரக்கத்தின் ஆண்டினை (2016) நமக்கு அளித்து யூபிலி கதவைத் திறந்து வைத்து ஆசியை அருளினார். ஆன்மிக இரக்கச் செயல்களையும் உடலார்ந்த இரக்கச் செயல்களையும் நாம் தொடரத் தூண்டுதல் தந்தார்; தொடர்கிறோமோ என்று சிந்திப்போம்.

இறைத் தந்தையின் இரக்க முகமே ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவர் தனது பணிவாழ்வில் இறைத் தந்தையின் இரக்கத்தையே உலகறியச் செய்தார்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டை நம் திருத்தந்தை ஏற்படுத்தி இறைவனோடு மானிட சமுதாயம் ஒப்புரவாக "இரக்க முகம்" என்ற திருத்தூது மடலை வழங்கினார்.

இறை இரக்கம் தொடரும் ஒன்று என்றுணர்த்த திருத்தந்தை பிரான்சிஸ் "இரக்கமும் இழிநிலையும்" என்ற திருத்தூது மடலை விடுத்தார்.

திண்டிவனம் முப்பணி நடுநிலைய பேராசிரியர்கள் "தொடரும் இறை இரக்கம்" என்ற ஒரு சிறந்த நூலை 2017 சனவரியில் வெளியிட்டுள்ளனர்.

இரக்கச் செயல்களை நாம் தொடர வற்புறுத்துகிறார் நம் திருத்தந்தையும்.

பிள்ளைகளே! நீங்கள் எந்த இறை இரக்கச் செயல்களைச் செய்து வருகிறீர்கள்? தொடர்கிறீர்களா?!



அசிசிநகர் புனித பிரான்சிஸ் இக்காலத்துக்கும் உரியவர். திருத்தந்தை பிரான்சிஸ் இக்காலத்திற்குப் பொருத்தமானவர்.

| அன்று | இன்று |
|---|---|
| 12-ஆம் நூற்றாண்டு | 21-ஆம் நூற்றாண்டு |
| அசிசி நகர் பிரான்சிஸ் | திருத்தந்தை பிரான்சிஸ் |
| இயற்கையில் இறைவன் ஆதவனின் கீதம் | இயற்கையில் இறைவன் "புகழ் அனைத்தும் உமதே" சுற்றுமடல் |
| இக்காலத்துக்கும் உரியது | இக்காலத்துக்குத் தேவை |
| போர்சியுங்குலா பலன் பாவ மன்னிப்பு - பரிகாரம் பரிபூரண பலன். எளிதில் அடைய கோவில் சந்திப்பு | இறை இரக்க ஆண்டு - யூபிலி பாவமன்னிப்பு - பரிகாரம் - பரி பூரண பலன் - நம் ஊரளவில் இரக்க முகம் |
| தொழுநோயாளர் பணி | தொழுநோயாளர் பணி காலடிகளைக் கழுவுதல் |
| அமைதியின் தூதனாக | அமைதியின் தூதன் |
| 3-ஆம் சபை - குடும்பத்தில் புனிதம் - மீட்பு | "அன்பின் மகிழ்ச்சி" குடும்ப வாழ்வில் புனிதம் மீட்பு |
| இக்காலத்துக்கும் உரியவர் | இக்காலத்திற்கு ஏற்றவரே! |

**இயற்கையை நேசிப்பது**
**இறைவனைப் புகழ்வது**
**இஃதொன்றையே இவ்வாண்டு**
**புனிதர் வரலாற்றிலிருந்து**
**கடைபிடிக்கும் பாடமாகக்**
**கொள்வோம்.**





**இயற்கை நேயரே!**

அசிசிநகர்

**புனித பிரான்சிசே!**

**எங்களுக்காக மன்றாடும்!**

*விவிலியத்தின் இதயத்தில்*
*தோரணையாய் அமர்ந்துள்ள அன்பு நெஞ்சங்களே!*
*புனிதம் என்பது ஒரு பயணம்.*
*பாதைகள் தெரியவில்லை என்று ஒதுங்கிவிடாமல்*
*நம்பிக்கை விளக்கை இதயத்தில் ஏற்றி*
*இயேசுவைக் கரம் பிடித்து நடப்பது அது.*



*வருவோர் போவோர் எல்லாம் ஒய்யாரமாய் அமர்ந்து,*
*உண்டு உறங்கி, ஓய்வெடுத்துவிட்டுப் போகும் போது*
***புனிதர்கள்** மட்டும் தான் கண்களில்*
*விழிப்பை வைத்து சளைப்பில்லாமல் **உழைப்பவர்கள்...***
***இவர்கள்** மற்றவர்கள் எல்லாம் தங்களின் தேவையை*
*பாய்விரித்துப் போட்டு இடம் பிடிக்கும் போது*
*தங்களுக்கென உள்ளதையும் கொடுத்துப் **பிறரை வாழ்விப்பவர்கள்...***
***இவர்கள்** தங்களின் பாதுகாப்புக்காக எதையும்*
*கற்றுக் கொள்ளமாட்டோம் என்று ஒதுங்கிவிடும் போது...*
*புதிது புதிதாய் எது வந்தாலுமும்*
*அனைத்தையும் கற்றுப் **பிறரின் நலனுக்காக வாழும் தலைவர்கள்.***
*சோற்றுக்காகவோ தங்களின்*
*இரத்த அடையாளங்களுக்காக மட்டும் வாழாமல்*
*அனைவரையும் இயேசுவின் பிள்ளைகளாய்ப் பார்க்கும் **மாமனிதர்கள்...***
*நேற்று விழுந்த மழைக்காக அணையை உடைக்காமல்*
*அத்தனை ஓடைகளையும் ஒன்றிணைத்து புதுமை*
*படைக்கும் **புரட்சியாளர்கள்...***
*சவால்களைச் சந்திக்க முடியாமல் தேவைக்கேற்ப கபடநாடகம் ஆடாமல்*
*இயேசுவின் இலட்சியத்தோடு அனைத்தையும்*
*எதிர்கொள்ளும் **இலட்சியவாதிகள்...***
*எதையும் இழந்தாலும் மன்னிப்பை மட்டும் இழக்காத*
*இயேசுவின் **மறு உருவங்கள்...***
*இறைவார்த்தையை அறியும் நாம் அனைவரும்*
*இப்படி மாறினால் வீதியெல்லாம் புனிதப் பயணம் செய்து தோரணம்*
*கட்டலாம்... நம் வாழ்வை வீதியெங்கும் விழாவாக்குவோம்...*

***அன்புடன் என்றும்***

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**

**வெளியீடு**
**அருள்பணி. ம. பிலோமின் தாஸ்,** இயக்குநர்,
முப்பணி நடுநிலையம், திண்டிவனம் - 604 002